# '83ல் இருந்து '88 வரை




170
பற்றி
SL/PR

ஊ.பு.

# 80 ல் இருந்து

# 88 வரை

நான் வெளியீடு - 12

முதற் பதிப்பு : 27 – 5 – 1989
விலை : ரூபா 15/-
வெளியீடு : 12

ENPATHILIRUNTHU ENPATHTHEDDU VATAI
(A Collection of letters promoting awareness particularly to the youth and the process of humanization)

By

Fr. Vincent Patrick, O. M. I, B. A. (Hons)
O. M. I. Seminary,
Colombuthurai,
Sri Lanka.

Published by:
Naan Publications,
Oblate General Delegation,
Jaffna.

Printed by:
Mani Osai Printers,
Jaffna.

ஆசிரியரின் ஏனைய நூல்கள்:

- உறவுகளின் ராகங்கள்
- விடுதலை இறையியல்
- விஞ்ஞானிகள்

# ஆசியுரை

வளர்ந்து வரும் விஞ்ஞான அறிவியல் உலகில் ஆன்மீக சிந்தனைகளை தொடர்பு சாதனங்கள் மூலம் வெளிப்படுத்த பல களங்கள் இருந்தும் பயன்படுத்தத் தவறும் பலருக்கு அருள்திரு வின்சன்ற் பற்றிக் அடிகளாரின் இந்த முயற்சி விழிப்படையச் செய்யும் என்பதில் ஐயமில்லை. 'நேரமில்லை, நேரமில்லை' என நேரத்தை வீணடிக்கும் பலருக்கு, இவரது அயராத உழைப்பால் மலர்ந்த இந்நூலின் இதழ்கள் சமூக முன்னேற்றத்திற்காக, சொல்லும், செயலும் ஒன்றாய் நடைமுறைக்குத் தேவையாக மனிதத்துவத்தின் மகிமையை மதித்து வாழத் தூண்டும் அறிவுரைக் கடிதங்களாகத்தான் இருக்கின்றன என இதனை படிக்கும்போது உணர முடிகிறது.

''பேச்சுக்கள் 100 செயலோ பூஜ்ஜியம்''
''தலையால் அல்ல, காலால் நடவுங்கள்''
''வார்த்தை + வாழ்க்கை = மனிதன்''

இவை போன்ற உண்மையை உணர்த்தும் கருத்துக்களை சமூகம் எதிர்க்கும் என்பதற்காக உண்மை உரைக்கப் பின்வாங்குவது சமூகத்தை பின்னடையச் செய்வதற்கு சமம என்பதனைத் துணிந்து எழுதுவதும் அதன்படி வாழ்வதும்தான் இன்றைய உலகில் மிகவும் அவசியமானது என உணர்த்துகிறார். கடிதங்கள் ஒவ்வொன்றும் காலத்தின் டயறிகள் போன்று 80 ல் இருந்து 83 வரை பல நிகழ்வுகளை நினைவூட்டுபவையாக உள்ளன.

சமய போதனைகளை சமூகப் பார்வையுடன் அணுகும் இவரது புதிய அணுகுமுறைகள், இவரது கடிதங்களால் இளைஞர் உலகில் தனக்கென ஒரு வாசகர் வட்டத்தையே உருவாக்கி புதிய உலகைக் காண வழிகாட்டியாய் செயல்படுகிறார். பல பணிகளூடே எழுத்துலகிலும், இலக்கிய நெஞ்சங்களிடமும் பல வெளியீடுகள் மூலமும் 'நான்' மஞ்சரிவாயிலாகவும் சந்தித்து சமுதாயத்தை நல்வழிப்படுத்த எடுக்கும் அவரது அரிய முயற்சிகள் வெற்றி பெற எனது நல்லாசிகள்.

ஞானி. பொன்னையா O. M. I. L. Ph.
யாழ். அ. ம. தி. முதல்வர்

18475

## உள்ளம் என்ற கண்ணாடி..

அழுக்கு கண்ணாடியில் பட்டு விட்டால் நாம் கண்ணாடி முன் நின்றாலும் எம் உடலைத் தெளிவாகக் காணமுடியாது. அவ்வாறே எமது உள்ளம் என்ற கண்ணாடியில் கறைபட்டு விட்டால் எம்மை முழுமையாகக் காணமுடியாது. கள்ளமின்றி வெள்ளை உள்ளம் கொண்டு வாழ்வோர் தம்மைத் தெளிவாகக் காண்பார்கள்.

அழகு, அன்பு, அமைதி எம்மில் குடிகொண்டிருக்கும் போது எமது உள்ளம் குதூகலிக்கும். நாவையமும் நம்பிக்கையும் உரியவர்களாய் நாம் வாழ்கிறோம் என்று எம் அனுபவங்கள் கூறும்போது உள்ளம் மகிழ்வால் பொங்கி வழியும். அதற்கு மாறாக ''யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம்'' என்று அங்கலாய்க்கும் வண்ணம் சம்பவங்கள் நிகழும்பொழுது உள்ளம் வெம்பி அழுகிறது; 'மருந்தும் ஒரு நோய்' ஆக மாறுகின்றது.

''அழுவதற்கென்றே பிறந்துவிட்டோம்'' என்று சிலர் வருந்துகின்றார்கள். அப்படி தொடர்ச்சியாக அழுவது அழகல்ல என்று 'நான்' அனைவருக்கும் அறைகூவல் விடுக்கின்றான். அழுகையும், சிரிப்பும் அனைவர்க்கும் உரியது. உள்ளப் பக்குவத்தோடு உவகையோடு நாளாந்தம் வாழுதலை இலட்சியமாகக் கொள்ளுதலே சிறப்புமலர் விடுக்கும் செய்தியாகும்.

''நான்'' தை – மாசி 1980 — ஆசிரியர்

# உணர்ச்சிகளுக்கு அப்பால்?

ஒரு சிலர், மற்றவர்களை உணர்ச்சியற்ற வெறும் உருவங்களாக நினைத்து செயற்படுவார்கள். அவர்களும் தங்களைப்போல் மனிதர்கள் என்பதை முற்றாக மறந்திடுவார்கள். மற்றவர்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை.

''பனையிலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல''

நொந்து போயிருப்பவர்களை இன்னும் கொஞ்சம் நோகப்பண்ணினால் அவர்கள் என்ன செத்தாபோயிடுவார்கள்?' என்று பிறரது உணர்வுகளை சிதைவுறுப்பார்கள்.

தன்மனம் மட்டும்தான் கரும்பு, மற்றவர்களின் உள்ளமோ இரும்பு என்ற எண்ணத்தோடு உருகிய இரும்பைக் கொல்லன் அடிப்பது போன்று மற்றவர்களின் உள்ளத்தோடும் உணர்வுகளோடும் விளையாடுவது அவர்களுக்கு கைவந்த கலையாகிவிடுகிறது.

உணர்ச்சிகளின் தாக்கம் மனித வாழ்க்கையில் அளவிடற்கரியது. தூக்கமின்றித் தவிப்போரும், உயர் ஆக்கத்திற்காக அயராது உழைப்போரும், கருவிலிருக்கும் சிசுவும், சாகத் துடிதுடிக்கும் வயோதிபனும் உணர்ச்சிகளின் தாக்கத்திற்கு உட்பட்டோரே. விரக்தியுணர்வோடிருப்பவன் சோர்வுடன் காணப்படுவான்; தனிமையை நாடுவான்; உலகம் முழுவதுமே அவனுக்கு வெறுமையாக, ஏக்கம் ஏமாற்றம் போன்றவற்றின் பிரதிபலிப்பாகத் தோன்றும். போட்டி ஒன்றில் முதலிடம் பெற்றவன் மலர்ந்த முகத்தோடு, மகிழ்ச்சி பொங்கக் காணப்படுவான். இவை உணர்ச்சிகளின் கூட்டு உந்துகை (Joined Impetus) என்றால் அது மிகையாகாது.

'உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட மனிதன்' ஐ மற்றவர்களில் காண முற்படுதல் முறையன்று. உணர்ச்சி இல்லாத மனிதன் யார்?

" நான் " பங்குனி – சித்திரை 1980 — ஆசிரியர்



# எல்லோரும் நல்லவரே!

மனித வாழ்க்கையை ஓர் அழகிய ரோஜாச் செடிக்கு ஒப்பிடலாம். அது வளரும் நிலத்தைப் பண்படுத்தி, பசளையிட்டு, காலத்துக்குக் காலம் அதன் தேவையற்ற கிளைகளை வெட்டி பக்குவமாய் பராமரித்து வந்தால் அது அழகான மலர்களைக் கொடுத்து எழிற்கோலத்தே காட்சி அளிக்கும். மனித வாழ்க்கையும் பயன் தரும் வாழ்வாக அமைந்திட அது பண்போடு பராமரிக்கப்பட வேண்டும். ஒருமுகப் படுத்தப்படாத சிந்தனைகளும் ஒழுங்கீனமான செயற்பாடுகளும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அன்றேல் விளைவது அமைதியின்மை, நெறிப்பிறழ்வு, முரண்பட்ட செயற்பாடுகள் போன்றவையே. பரம்பரைத்துவமும் (Heredity) சூழலும் (Environment) ஒருங்கிணையாவிடில், சிந்திக்கும் திறனில் ஓர் ஒழுங்கமைப்பு (Harmony) காணப்படாவிடில் மனித செயற்பாடுகளில் தெளிவுக்குப் பதிலாகக் குழப்பமே கூடுதலாகக் காணப்படும்.

அறிஞர் ஜோன் பவலின் கூற்றுப்படி. எப்பொழுதும் நிர்ணயிக்கப்பட முடியாதவையே செயற்பாடுகள் ஏனெனில், அவை சுதந்திரமானவை. எனவே, ஒருவனது மாறுபட்ட செயற்பாடுகளைக் கொண்டு அவனைப் புறக்கணியாதிருப்போம். எந்நிலையில் வாழ்பவனையும் நல்நிலையில் வாழவைப்பதே எமது இலட்சியமாக அமையட்டும். 'எல்லோரும் நல்லவரே' என்று உலகம் புரிப்படைய, மனித செயற்பாடுகளைப் புரிந்து, புது உலகம் படைப்போமா?

" நான் " வைகாசி – ஆனி 1980 — ஆசிரியர்

# தவறு தவறட்டும்!

உலகில் கடன் வாங்காது வாழ்ந்தமனிதன் எவனுமேயல்ல என்று கூறுவார்கள். அவ்வாறே எந்த ஒரு மனிதனும் தவறுசெய்யாது வாழ்ந்ததில்லை என்று கூறினால் அது மிகையாகாது. தவறு, தப்பு, பிழை ஆகிய எதிர்மாறான செயல்களை செய்யும்மனிதர்களில் சிலர் அவற்றைத் தொடர்வதில் இன்பம் காணுகிறார்கள். அல்லது அவற்றைத் தொடர்ந்து செய்வதற்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஒரு சிலர் மாத்திரமே அச்செயற்பாட்டின் மூலம் ஒரு படிப்பினையைப் பெற்று நல்வாழ்க்கைக்கு மேலும் ஒரு வித்திடுகிறார்கள். இவர்களே உண்மையான வளர்ச்சியடைபவர்கள்.

தவறு செய்வது இயற்கை. அது மனிதனோடு ஒட்டிப்பிறந்துவிட்டது. அதற்காகத் தவறு செய்தவனை சமுதாயம் தள்ளிவைப்பதும், அல்லது தவறு செய்தவன் தன்னைத் தானே வெறுப்பதும் மேலும் பல தவறுகளுக்கு வழிவகுப்பதாகுமல்லவா?

தவறு என்ற பதத்தில் பொதிந்துகிடக்கும் உண்மை என்ன? வேண்டுமென்று செய்த ஒன்றல்ல, ஏதோ எதிர்பாராததுஒன்று நடந்து விட்டது என்ற ஒரு பொருள் மறைந்திருப்பதை நாம் அவதானிக்கிறோம்; தவறு தன்னையறியாமலே தவறிப்போய் ஒரு வினைச்சொல்லாய் நிற்கின்றது. எனவே சமுதாயம், தவறியவனை ஏன் சீர்தூக்க முயற்சிக்கக் கூடாது? தவறு செய்தவனும் ஏதோ நடந்தது நடந்து விட்டது, இனியாவது அவதானமாக இருப்பேன் என்ற முடிவுக்கு ஏன்வரக்கூடாது?

“ நான் ” ஆடி – ஆவணி 1980 — ஆசிரியர்



# யார் அழுதால் என்ன?

பெரியது ஒரு திருட்டில் அகப்பட்டு சிறைவாசம் செய்து கொண்டிருந்த மகனைப் பார்க்க வந்தாள் அவனது தாய். அவனை ஜன்னலருகே அழைப்பித்து, ஆத்திரம் தீரும்வரை அவளது கையைக் கடித்துவிட்டு, மகன் கூறினான்:

அம்மா, ஆரம்பத்தில் சிறு ஊசி ஒன்றைக் களவெடுத்துத் தந்தபோது என்னை இந்தக் கையினால் அடித்துத் திருத்தியிருந்தால் நான் இந்நிலைக்கு ஆளாகியிருக்கமாட்டேன்; நான் பெரும் திருடனாகியதற்கு நீங்களே பொறுப்பு.

ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் காரணிகள் இருக்கத்தான் செய்கின்றன. அக்காரணிகளில் சில அடிப்படையானவையாகவும் சில இரண்டாம் நிலையிலுள்ளவையாகவும் அமைந்துவிடுகின்றன. எம்மை முழுமைப்படுத்துவதில் அல்லது எமது உளச்சக்தியை ( Psychicenergy ) வழிப்படுத்துதலில் சில காரணிகள் சாதகமானவையாகவும் சில பாதகமானவையாகவும் காணப்படுகின்றன. எனினும், ஈற்றில்

“ ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே ”
— பழமொழி மறைய

“ ஆவதும் எம்மாலே, அழிவதும் எம்மாலே ”
— புதுமொழி பிறக்கிறது

அதாவது, வாழுவதற்கும் வாழவைப்பதற்கும் அன்றேல் மாளுவதற்கும் மாளவைப்பதற்கும் நாமே பொறுப்பு.

“யார் அழுதால் என்ன, யார் சிரித்தால் என்ன” என்று ஏனோதானோ நிலையில் நாம் இருந்துவிட்டால் எல்லாம் சுலபமாகிவிடுமோ? பொறுப்பின் கனமக்கு அஞ்சி வெறுப்பைச் சம்பாதிப்போமா?

“ நான் ” புரட்டாசி – ஐப்பசி 1980 — ஆசிரியர்

# முன்னணியில் நிற்பவர்கள்

ஒரு கிராமமும் இல்லாமலேயே மற்றவர்களுக்குப் 'பைத்தியம்' என்று பட்டம் கொடுப்பதிலோ அல்லது அவர்களைப் பைத்தியகாரர்களாக்குவதிலோ முன்னணியில் நிற்பவர்கள் ஒரு சிலர். பிறரது நற்பெயரைக் கெடுப்பதும் பிறரது நடை, உடை, பாவனைகளைப் பார்த்து, பல்லிளித்துப் பரிகசிப்பது இவர்களது பைத்தியக்காரத்தனத்தில் ஒரு பகுதியாம். மற்றவர்கள் அழும்பொழுது, அல்லற்படும்பொழுது அதனைப் பார்த்து சிரிப்பார்கள். மற்றவர்களது வருத்தமே இவர்களது பைத்தியத்திற்கு மருந்து; உளப்பசிக்கு விருந்து.

சுய இன்பம் அல்லது சுய இலாபம் கருதி மற்றவர்களது உள்ளத்தைக் குழப்புவதோ அன்றேல் அவர்களது வாழ்க்கையைக் குலைப்பதோ வீட்டிற்கு வெளிச்சம் வருவதற்காகக் கூரையை எரிப்பது போன்றதாகும். ''மனிதனுக்கு மனிதனே எதிரி'' என்ற நிலையில் மனித வளர்ச்சி குன்றும் பொழுது அது மனித சமுதாயத்தின் உளப் பிறழ்வையே (Social Abnormality) பிரதிபலிக்கின்றது. இத்தகைய சமுதாயத்தின் சமச்சீரற்ற உளப்போக்கே தனிமனிதனின் உளப் பிறழ்விற்கு வழிவகுக்கின்றது. அது காலகட்டத்தில் தனிமனிதனோடு சமுதாயமும் நிரந்தரமாக அழிவதற்கு ஏதுவாகின்றது.

தனிமனிதனை ஒப்புரவான, சமச்சீரான உளநிலையில் தொடர்ந்து வாழ்வதற்கு ஏனைய மனிதர்களின், சமுதாயத்தின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. எனவே தனிமனிதர்கள் நிரந்தர நோயாளர்களாக (Chronic) மாறுமுன் நிறைவான, நலமான உள்ளத்தோடு வாழ்ந்து, முன்னணியில் நிற்பதற்கு சமுதாயத்து நோய்களைக் களைவது அவசியமாகின்றது

'' நான் '' கார்த்திகை – மார்கழி 1980 — ஆசிரியர்



# விடிவை நோக்கி!

**பி**றந்துவிட்டது 1981... பழையனவற்றை மறந்து புதிய ஆண்டிலே புதிய ஒரு வாழ்க்கை ஆரம்பிப்போம் என்று எண்ணிய ஒரு சிலர் தொடர்ந்தும் பழையனவற்றில் சிக்குண்டவர்களாய் சீரழிகின்றார்கள். பழையன கழிதலும் புதியன புகுதலும் பேச்சளவில் மட்டும்தான்.

''இந்த ஆண்டு ஒரு மோசமான ஆண்டு'' —

இது இன்னொரு வகையினர் ஒவ்வொரு புது ஆண்டுப் பிறப்பின்போதும் ஆரம்பிக்கும் அனுபல்லவி. குருநாகல் புகையிரத நிலையத்தில், பயணிகள் பலர் புகைவண்டியின் தாக்குதலால் கொல்லப்பட்டார்கள். கட்டுகஸ்தோட்டப் பகுதியிலுள்ள ஆற்றில் பஸ்வண்டி பாய்ந்ததால் சிலர் இறந்தார்கள்; பருவப் பெண் பட்டப்பகலில் விக்டோரியா பூங்காவில் பலாத்காரமாகக் கெடுக்கப்பட்டாள்; குரும்பசிட்டி, கொள்ளை, மன்னார் காலரா — இவை அவர்கள் கூறும் சான்றுகள். சில விபத்துக்களிலிருந்து ஒரு பெரு முடிவுக்கு வருவது விபரீதத்தைத்தான் வளர்க்கும்.

இப்படி விபத்துக்களையும் விபரீதங்களையும் மட்டும் கண்ணுறுக்குவதை விடுத்து விடிவை, மன விடுதலையை எதிர் நோக்குவோம். தனக்கேதான் 'புதிரான மனிதன்' தரணி தந்த தவப்புதல்வன். 'தனக்கு நிகர் தானே' என்று சொல்லும் அளவுக்குத் தகுதிவாய்ந்தவன். அவன் அப்படி, இவன் 'இப்படி' என்று இல்லாததையும் பொல்லாததையும் கூறி 'அரட்டை' அடிப்பதைவிட்டு 'நான் ஒரு ...' வாழத்துணிந்தவன் என்ற வகையில் 'உறவுகளைப் ...' பலப்படுத்தி செயற்படுவோம்.

'நான்'' தை - மாசி 1981 — ஆசிரியர்

# உளச் சக்தியின் உச்ச நிலை!

மனிதன் புரிந்துகொள்ள முடியாத விசித்திரப் படைப்பு என்றால் யாரும் மறுக்கமாட்டார். இருதயத்தையும் பரிமாற்றம் செய்யக்கூடிய அளவுக்கு விஞ்ஞானம் வளர்ச்சியுற்றாலும், நுண்கருவிகளைக் கண்டுபிடித்து மனிதனையே வியப்புறவைக்கும் விதமாக நுட்பக்கலை ஓங்கினாலும், மனிதன் என்றும் ஒரு விசித்திரப் படைப்பு என்றே நிரூபித்துக்கொண்டு போகின்றான்.

அவனது உள்ளத்தின் ஆழத்தில் புதைந்து கிடக்கும்சக்திகளை அவன் முற்றாகப் புரிந்துகொள்ள முடியாதவனாய் இருக்கின்றான். பூகோளத்தில் வியாபித்துக்கிடக்கும் சக்திகள் பூகம்பங்களாக இடிமுழக்கங்களாக பல வடிவங்களில் தோன்றுவதைப்போல மனிதனின் உடலில் வியாபித்துக்கிடக்கும் உளச்சக்தி ஒருங்கிணைந்து பல வடிவங்களில் பல விளைவுகளை ஏற்படுத்துகின்றது. உதாரணமாக ஒருவர் பலமுள்ளவராகப் பாரிய வேலைகளையும் அதிசயிக்கக்கூடிய முறையில் செய்வார். யானையைக் கட்டும் சங்கிலியைக்கூட கைகளால் சுக்கு நூறாக்குவார்; புவியீர்ப்பை எதிர்த்து அந்தரத்தில் உலாவுவார்.

உளச்சக்தி எல்லோரிடமும் இருப்பினும் அது விசேட முறையில் வெளிப்படுத்தப்படுவது ஒருசிலரிடமே. சிலருக்கு இச் சக்திகள் இயற்கைக் கொடைகள் அல்லது வரம் எனலாம்; இன்னும் சிலருக்கு நெறிப்படுத்தப்பட்ட வாழ்வால் சாதித்த சாதனையாகலாம்; வேறு சிலருக்கு மனோவசியம், ஊக்கிகள் மூலம் விளைந்தவை எனலாம். ஆனால் இவ்வுளச் சக்திகளை நெறிப்படுத்தி பயன்படுத்தும்போது எமது வாழ்க்கை நிறைவுபடுத்தப்படும்; வளர்ச்சி உறுதிப்படுத்தப்படும்.

"நான்" பங்குனி — சித்திரை 1981 — ஆசிரியர்



# அறப்போருக்கு அழைப்பிதழ்!

"அச்சம் உள் அடக்கி அறிவு அகத்து இல்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி
எச்சம் அற்று ஏமாந்து இருக்கை நன்றே"

— இது வெற்றிவேற்கையில் அதிவீரராமபாண்டியனின் கூற்று. அதாவது பயந்தாங்கொள்ளியாயும் புத்தியும் இல்லாத உபயோகமற்ற பிள்ளைகளைப் பெறுவதைக் காட்டிலும் அக் குடும்பத்தினர் பிள்ளைப்பேறு இல்லாது வாழ்வது நன்று. வீரமான நேர்மையான இளம் சமுதாயத்தைப் படைக்கும் பொறுப்பு பெற்றோரிலேயே தங்கியுள்ளது.

அன்புக் கணவன் போரிலே இறந்துவிட்டான் என்பதைக் கேள்வியுற்றதும் மனத்தளர்ச்சியுறாது தன் ஒரே ஒரு பாலகனைப் போருக்கு அனுப்பிவைக்கிறாள் வீரத்தாய். தன் மைந்தனும் இறந்துவிட்டதை அறிகின்றாள்; ஆயினும் அவன் புறமுதுகில் அல்ல, மார்பிலே அம்பு தைத்து மாண்டான் எனக் கண்டதும் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றாள் பாசத்தை வீரத்தால் வென்ற இம் மங்கை. அச்சத்திற்கும் அறியாமைக்கும் அநீதிக்கும் அகந்தைக்கும் அடிமையாகி வாழும் பெண்களுக்கு மட்டுமல்ல அடிமைநிலையில் வாழும் ஆண்களுக்கும் இப் பெண் ஓர் அரிய பாடமாய் விளங்குகின்றாள்.

அடிமைநிலை ஒழிய வேண்டும்; அழிவுநிலை மறைய வேண்டும். அச்சம், ஆணவம் இன்றி அன்பு, துணிவு போன்றவற்றை ஆயுதங்களாகக்கொண்டு போர்புரியும் சமுதாயம் மலர வேண்டும்; மனிதனுக்கு மனிதன் பயந்து ஒழிந்து வாழும்நிலை மாற வேண்டும்.

'நான்" வைகாசி - ஆனி 1981 — ஆசிரியர்

## ... ஒரு சூதாட்டம்

ஒரு சங்கிலியிலே பல வளையங்கள் ஒன்றோடொன்று கோர்க்கப்பட்டிருப்பதுபோல நம் வாழ்க்கையும் ஒன்றோடொன்று தொடர்புள்ள பல பிரச்சனைகளைக்கொண்டதாய் இருக்கிறது. இந்தப் பிரச்சனைகள் ஒன்றுபோக ஒன்று புதிது புதிதாய் முளைத்துக்கொண்டே இருக்கின்றன. இவற்றை நாம் எந்த அளவுக்குச் சமாளிக்கின்றோமோ அந்த அளவுக்கு வாழ்க்கையில் வெற்றியாளர்களாய் விளங்குகிறோம்.

'வாழ்க்கை என்பது ஒரு சூதாட்டம். அதன் வெற்றியும் தோல்வியும் எம்முடைய திறமையிலே" என்கிறார் டாக்டர் ராதா கிருஷ்ணன்.

ஆம் வாழ்க்கை என்ற சூதாட்டத்தில் வெற்றி எய்துவதற்கு அதிர்ஷ்டம் மட்டுமல்ல ஆற்றல்களும் அவசியம்தான். 'அதிர்ஷ்டம் அற்றவன்' என்று அடிக்கடி தன்னையே நொந்து கொள்பவனே, அதிர்ஷ்டத்தை மட்டுமல்ல சுய ஆற்றலையுமே இழந்துவிடுகின்றான். இதனைத்தான் சேக்ஸ்பியர் "வானத்து விண்மீன்களிலல்ல எம்மிலேயே எம் தலைவிதி தங்கியுள்ளது" என்கிறார். எம்மை நாமே உருவாக்கிக்கொள்கின்றோம். எமது மனமே எமது வாழ்வின் வெற்றிக்கு இன்றியமையாத காரணியாக விளங்குகின்றது. மனம் ஒத்த வாழ்க்கையை அமைத்து இனிதான உயர் எண்ணங்களால் நிரப்பி நாள்தோறும் மகிழ்பவர்கள் எடுத்த எதற்கும் விதிமேல் பழிபோடவேண்டிய விரக்தி நிலைக்கு பொறுப்பற்ற தன்மைக்கு நிர்ப்பந்திக்கப்பட மாட்டார்கள். அத்தோடு அவர்கள் தங்களுக்குத் தாங்களே எஜமானர்களாகத் (agents of themselves) திகழ்வார்கள்.

''நான்'' ஆடி – ஆவணி 1981 — ஆசிரியர்



## ... ... ஒரு உதவாக்கரை

ஒரு மாணவனைப் பலர் முன்னிலையில் 'மக்கு' என்று ஒரு ஆசிரியர் கூறுகின்றார். அவன் அவமானத்தால் கூனிக் குறுகி நிற்கின்றான். உருவாக்கவேண்டிய ஆசிரியரே அவனை 'உதவாக்கரை'யாக மட்டம்தட்டிவிடுகின்றார்; 'உருப்படாதவன்' என்று நெருப்பான வார்த்தைகளைக் கூறி அவனது வாழ்வில் ஒரு நல்ல திருப்பத்தை ஏற்படுத்தத் தவறிவிடுகின்றார். அறிவிற் குறைந்தவர்களை மனம் தளர்வுறச் செய்யாது ஆர்வமூட்டி, அரவணைத்து, உருப்படுத்தி வாழும் பெற்றோர், பெரியோர், ஆசிரியர்களே எமது சமுதாயத்திற்குத் தேவை. எப்பொழுதும் குறைகளையும் கறைகளையுமேபற்றிப் பேசும் பழக்கம் எம்மிடம் இருந்தால் அது எமது பாமரத்தனத்தையே எடுத்துக்காட்டுகின்றது. குறைகளை நிறைவுபடுத்தும் நோக்குடனேயே காணவேண்டும். அப்படி அவற்றை நிறைவுபடுத்தும் தைரியம் எம்மிடம் இல்லை என்றால் குறைகளைப்பற்றிய பேச்சே வேண்டாம். எனவே, அனைவரையும் உற்சாகப்படுத்தி, உயர்ந்த ஒரு சமுதாயத்தை உருவாக்க முழுமூச்சோடு முன்வருவோம். உயர்ந்த இலட்சியங்களை வளர்ப்போம். அனைவர்க்கும் உறுதுணையாக உயர்நிலை மாந்தராய் வாழுவோம்.

''நான்'' புரட்டாதி – ஐப்பசி 1981 — ஆசிரியர்

# நீர்க்குமிழி

கடல் நடுவே ஓடவிடப்பட்ட காகிதக்கப்பல் இலகுவில் அதன் உருவை இழந்துவிடும். மழை நீரில் நனையவிடப்பட்ட மணல் வீடோ எளிதில் கரைந்துவிடும். இவ் வரிசையில் மனித வாழ்க்கையோ நீர்க்குமிழிக்கு ஒப்பாகிறது. நீர்க்குமிழி நிலைத்து நிற்பது ஒரு சில நிமிடங்களே. மனித வாழ்க்கையும் நிலையில்லாததுதான்; இதனை நிர்மூலமாக்க பல சக்திகள் காத்திருக்கின்றன. இவற்றுள் நம்பிக்கையின்மையே அபாரமானது. 'யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம்' என்று அங்கலாய்க்கும் மனிதன் ஆரம்பத்தில் தன்னைத்தானே நம்பாது தத்தளிக்கிறான். தன்னகத்தே உள்ள சக்திகளில் தனது ஆற்றல்களில் என்றும் சந்தேகம் கொள்பவன் தன்னையே நம்பான். தனது சொந்த ஆற்றல்களில் அவநம்பிக்கைகொண்டு வாழ்வின் 'பிடிப்பை' குறைத்துக் கொள்கிறான். இவ்விதமாக நன்னம்பிக்கை இழந்த தனிமனிதன் படிப்படியாக மற்றவர்களையும் நம்பமறுப்பதன் நிமித்தம் விரக்தியினால் ஆட்கொள்ளப்படும் அவலநிலைக்கு ஆளாகின்றான். "நம்ப நட; நம்பி வாழாதே" என்று சிலர் அறிவுரை கூறுவார்கள். ஆயினும் மற்றவர்கள் நம்பக்கூடியவகையில் நாணயமாக வாழ்ந்தால் மட்டும் போதுமா? மேலாக, நம்மை நாமே நம்புவதோடு அந்த நம்பிக்கையை மற்றவர்கள்மட்டில் வளர்ப்பதன்மூலமே நம் வாழ்க்கை வளம்பெறலாம்.

"நான்" கார்த்திகை - மார்கழி 1981 — ஆசிரியர்



# புதிய வார்ப்புகள்

புதுமையைத் தேடி அலைகின்ற மனிதன், நாளாந்தம் உறவினில் புதிய சுகத்தைக் காணத் துடிக்கின்ற மனிதன் இன்னுமொரு புதிய ஆண்டைச் சந்தித்துவிட்டான். இப் புதிய ஆண்டில் அவன் எடுக்கின்ற தீர்மானங்களில் எத்தனையை நிறைவேற்றுவான் என்பது அவனது உடற்பலத்திலும் பார்க்க உளத்திறனிலேயே தங்கியுள்ளது. அதேவேளை 'விரலுக்கேற்ற வீக்கம்' என்றவாறு அவனது தீர்மானங்கள் இவனது சக்திக்கேற்றவாறே அமைய வேண்டும். அவனது தீர்மானங்கள் புத்துயிர் பெறவேண்டும்; பழையனவற்றைக் களையவேண்டும்.

புதிய உருவங்களை அமைப்பதற்கு புது மெழுகு மட்டும் போதாது. நாம் விரும்பியபடி மெழுகிற்கு உருவங்களைக் கொடுக்க மெழுகு உருகிய நிலையிலிருக்க வேண்டும். மனித 'புதிய வார்ப்புகள்' இவ்வுலகை மிளிரவைக்கத் தனிமனிதனின் உள்ளம் நல்ல கருத்துக்களால், நல்ல கொள்கைகளால் நிரப்பப்பட வேண்டும்; மென்மையாக்கப்பட வேண்டும். அன்பும் அருளும் அமைதியும் ஆனந்தமும் நிறைந்த நல்வாழ்க்கை நாம் வாழ்க்கைக்குக் கொடுக்கும் புது அர்த்தத்தினால் உருவாக்கப்படும்.

"இடமும் செல்ல வேண்டாம் நீ
வலமும் செல்ல வேண்டாம் —
இலக்கை நோக்கியே செல்வாயாக"

என்ற சுவாமி விவேகானந்தரின் வாக்கு எம்மை வழிப்படுத்தட்டும்.

"நான்" தை - மாசி 1982 — ஆசிரியர்

# அழியாத கோலங்கள்

அழியாத கோலங்களாக உறவுகள் உறுதிபெற ஒவ்வொரு தனிமனிதனது சாமர்த்தியமும் அவன் மற்றவர்களோடு சங்கமமாகும்பொழுது ஏற்படும் சமத்துவமும் இன்றியமையாதது. ''காதல் என்பது தேன்கூடு; அதைக் கட்டுவதென்றால் பெரும்பாடு'' என்கின்றான் கவிஞன் ஒருவன். காதல் மட்டுமல்ல, எந்த ஒரு உறவும் சிக்கலானது; சிரமமானது. நாளாந்தம் சிரத்தை எடுத்து, செயற்படுவதன்மூலமும் விட்டுக்கொடுக்கும். விளங்கிக்கொள்ளும் மனப்பான்மையை வளர்ப்பதன்மூலமும் உறவிலே உறுதி பிறக்கும், ஒருவர் ஒருவரூடாக இருவரும் பார்க்கும் உளத்திறன், இருவரிடையே நிலவும் ஒருமுகமைந்த உணர்வுத்திறன், கருத்து வேறுபாடுகளின் மத்தியிலும் கட்டிக் காக்கப்படும் ஒருங்கிணைந்த மனப்போக்கு (முரண்பாடுகளைப் பாராட்டாது மற்றவர்களை ஏற்றுக்கொள்ளல்) போன்றன உண்மை உறவின் படிக்கற்களாக அமைகின்றன. மனித உறவுகள் மங்காது துலங்குவதற்கு உளப் பொருத்தமே மிகவும் முக்கியமானது. ''உலகத்தின் கண்களிலே உருவங்கள் மறைந்தாலும் ஒன்றான உள்ளங்கள் ஒருபோதும் மறைவதில்லை'' — இது, 'உறவு ஒரு தொடர்கதை'யில் செல்வி சாந்தவட்சமியின் கூற்று, ஆம், உள்ளத்தால் உண்மையாக ஒன்றுபட்ட உறவுகள் என்றும் உயிருள்ளவை; அவை அழியாத கோலங்கள்.

''நான்'' பங்குனி - சித்திரை 1982 — ஆசிரியர்



# ஒரு கை ஓசை

''ஒரு மனிதன் ஒரு செயலைச் செய்யவேண்டாமென்று நீ கருதினால் அதைப்பற்றி அவனை அதிகமாகப் பேசும்படி செய். ஏனெனில் மனிதர்கள் எவ்வளவு அதிகமாகப் பேசுகிறார்களோ அந்த அளவுக்கு அவர்கள் செய்வதில்லை'' என்கின்றார் கார்லைல். இன்று, எமது சமுதாயத்தில் அளவுக்கதிகமாக தேவையில்லாது அலம்புகின்றவர்கள்தாம் அதிகரித்து வருகின்றார்கள். பயனில்லாத பேச்சுக்களால் சமுதாயத்தை நசுக்கப் படுத்திவரும் பதர்களே பரிமளிக்கிறார்கள். 'மனிதனுக்கு மனிதன் எதிரி' என்ற நிலை துளிர்விட, மனித சமுதாயம் தொடர்புகள் அறுந்த நிலையில் அவலப்படுகின்றது. சமுதாயத்துச் சன்னங்களான சாதி, சமய, மொழி வேறுபாடுகளை வளர்த்து, சமுதாயத்தைச் சீர்குலைப்பதிலே தொடர்புகளைத் துண்டிப்பதிலே மனிதன் முழுமூச்சாக இயங்கி வருகின்றான்.

ஒரு கை தனியாக ஓசையை எழுப்பாது. இரண்டு கைகளையும் ஒன்று சேர்த்து தட்டும்போதுதான் சத்தம் வரும். தொடர்புகள் தொடர்கதையாக, உறவுகள் நிறைவுகளாக தனியன்கள் ஒன்றுகூட வேண்டும்; ஒருமைப்பாட்டை வளர்க்க, சமுதாயச் சுபீட்சத்தை உருப்படுத்த ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டும். அப்பொழுது சமுதாயத்தில் இனிய ஓசை ஒலிக்கும்.

''நான்'' வைகாசி - ஆனி 1982 — ஆசிரியர்

# அவன் - அவள் - அது

ஒரு மனிதனின் வளர்ச்சியானது அவனது உடல், உள்ளம், ஆன்மீகம் மனச்சான்று போன்ற கூறுகள் வளருவதிலேயே தங்கியுள்ளது. ஒருவன் தன் வாழ்வில் சந்திக்கும் பலரோடு பரஸ்பர நிலையில் சங்கமமாவதிலும் தன்னிடமுள்ள சக்திகளை செல்வங்களை (அக, புற) மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதனாலும் மற்றவர்கள் வளர ஆவன செய்வதனாலும் அவன் தன்னையே வளர்த்துக் கொள்கின்றான். இந்த வரிசையில், இவ் விதழில், ஆளுமை வளர்ச்சியின் அவசியத்தை வலியுறுத்துகின்றார் விஜயகுமார்.

“நான் வளர எனக்கு ஒரு ‘நீ’ வேண்டும்.” எம்மிலே அந்த வளர்ச்சியடைந்துகொண்டிருக்கும் ‘நீ’ யைக் காண விரும்புகின்றார் ஸ்டாலின்.

சமுதாயப்படுத்துதலின் அறுவடையைச் சிரப்படுத்த முனைகின்றார் எஸ். டேவிட்.

இன்னும் பல எழுத்தாளர்கள் இம்முறை ‘நான்’ ஐ வளர்த்துள்ளார்கள். அதே வேளை,

நாம் எமது நிஜவாழ்க்கையில் தேய்ந்து கொண்டே போகின்றோம் என்றால் ‘அவன் – அவள் – அது’ என்ற படர்க்கை நிலையில் மற்றவர்கள் எம்மிடமிருந்து தள்ளிநிற்கின்றார்கள், அன்றேல் அவர்கள் எம்மோடு நெருங்கிய உறவுபாடு இல்லாமல் காணப்படுகின்றார்கள் என்றே அர்த்தமாகும். நான் + நீ = நாம் என்ற நிலையான ஒப்பந்தமே மனித வளர்ச்சிக்கு நம்மை இட்டுச் செல்லும்.

“மரம் வளர மண் வேண்டும்
மீன் வளர நீர் வேண்டும்
நான் வளர நீ வேண்டும்”
நீ வளர “நான்” வேண்டுமா?

“நான்” ஆடி - ஆவணி 1982 — ஆசிரியர்



# வசந்தத்தில் ஒரு வானவில்

வாழ்க்கை என்ற வசந்தகாலக் கோலம் வானில் விழுந்த கோடுகளாய் மாறுகின்றது. மனிதர்கள் என்ற வண்ண மலர்கள் உதிர்ந்த பூக்களாய் வாடி வதங்குகின்றன. கோவிலைப் போன்று புனிதமாகப் பேணிவளர்க்கப்பட வேண்டிய குடும்பங்களில் பலரும் பரிதாபப் படக்கூடிய சோக நாடகங்களாக அரங்கேறுகின்றன.

இத்தனைக்கும் மூலகாரணம் மனிதன் மதுபோதையினால் மதியைப் பறிகொடுத்து வாதைப்படுவதேயாகும்.

இதுதான் தன் தலைவிதி என்று நிலைகுலைய மதிமயங்கிக் குடித்து போட்டு நாலு கால்களில் தவழ்ந்து செல்லும் ஒருசிலர் மனைவியையும், பிள்ளைகளையும் அடித்துத் துன்புறுத்திச் சித்திரவதை செய்கின்றார்கள். இவ்விதழில் செல்வி இஸ்மாலிகா, குடிகாரக் கணவன் ஒருவனது கொடூரத்தை ஒரு கதை வடிவில் வர்ணிக்கின்றார். இத்தகைய கொடுமை எப்பெண்ணுக்கும் ஏற்படக் கூடாது என்று “நான்” விரும்புகின்றான். குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி வாழும் அவல நிலையிலிருந்து மனிதன் விடுபட வேண்டும். போதைப் பொருட்களின் கைப்பாவையாய் வாழும் போதை நிலையிலிருந்து விடுதலையடைய வேண்டும். மது மனிதனைக் குடிக்கும் இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அப்பொழுது பலரது வாழ்க்கையில் வசந்தம் வீசும்.

“நான்” புரட்டாசி - ஐப்பசி 1982 — ஆசிரியர்

# பொறுப்புகள் பன்முகப்படுத்தப்படுகின்றன!

இலட்சியம் என்ற உயர்ந்த விதையினை, சூழ்நிலை என்ற மண்ணிலே விதைத்து தைரியம், நம்பிக்கை என்ற உரமும், தண்ணீரும் விட்ட கதைதான் ஒரு தலைவனது கதை. ''தேசம், மதம், இனம், கலாச்சாரம் என்ற குறுகிய எல்லைச் சுவர்களைத் தாண்டி விருப்பு, வெறுப்புக்கு அப்பால் மனிதன், மக்கள், காலம் என்ற மூன்று சக்திகளின் ஒன்றுசேர்ந்த இயக்கமே ஒரு தலைவனை உருவாக்குகின்றது'' என்கின்றார் பேராசிரியர் எரிக்சன். ஆனால் இன்றைய நடைமுறை வாழ்க்கையிலே நாம் சந்திக்கும் தலைவர்கள் யார்?

நேர்மை இல்லாத அரசியல்வாதி
ஒழுக்கம் இல்லாத சீர்திருத்தவாதி
உண்மை இல்லாத எழுத்தாளன்
கொள்கை இல்லாத பேச்சாளன்
அறிவில்லாத படிப்பாளி
நாணயம் இல்லாத வியாபாரி

தன்னலமும் நான்தோன்றித்தனமும் தலைவனது தன்மைகளாக மாறுகின்றபோது நாடு கெட்டு குட்டிச்சுவராகிவிடுகின்றது. ஆள்பவன் மட்டுமல்ல தலைவன். நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் ஒவ்வொரு விதத்தில் தலைவர்களே. எனவே ஒவ்வொரு தனிமனிதனும் நாணயம், நேர்மை, ஒழுக்கம், உண்மை, அறிவு என்ற தலைவனுக்குரிய பண்புகளை வளர்த்து சமுதாயத்தை வளப்படுத்த வேண்டும்; ஒழுங்கான சமுதாயத்தின் பண்புகளை சுவைப்பதோடு நின்றுவிடாமல், பொறுப்புகள் பன்முகப்படுத்தப்பட்ட சமுதாயத்தில், சுமைகளைத் தாங்கவும் எம்மை தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

''நான்'' கார்த்திகை - மார்கழி 1982 — ஆசிரியர்



# நான் + நீ = நாம்

ஒருவன் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை மற்றவர்களைச் சார்ந்தே வாழுகின்றான். 'நான் இன்றி நீ இல்லை', 'நீயின்றி நான் இல்லை' என்ற பரஸ்பர உறவுநிலையில் ஒருவன் வளரும்போது, 'நாம்' என்ற கூட்டுமனப்பாங்கு (co-operative-attitude) உருவாகின்றது. தனிப்பட்ட மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் இடையேயுள்ள நெருங்கிய தொடர்பு 'நான் + நீ = நாம்' என்ற உறவுநிலையை உறுதிப்படுத்துகின்றது. இதற்கு மாறாக, மற்றவர்களை எதிர்த்து வாழ முற்படுவது, மற்றவர்களின் முன்னேற்றத்தைத் தடுத்து நான் மட்டும் முன்னேற முனைவது நலிவுற்ற ஆளுமையையே எடுத்துக்காட்டுகின்றது.

''பகட்டும் பேராவலுமே மனிதனிடம் உள்ள பெருங்குறைகள்'' என்கின்றார் உளவியலறிஞர் அட்லர். மனப்பக்குவம் உடையவன் உயர்நிலையை எதிர்பார்ப்பதற்கும் மனக்கோளாறுடையவன் (தாழ்வுச் சிக்கலால் அல்லது உயர்வுச் சிக்கலால் வருந்துபவன்) உயர்நிலையை எதிர்பார்ப்பதற்குமிடையே பெரும் இடைவெளி உண்டு. நல்ல மனநிலையிலுள்ளவன் தன்னிடமுள்ள உயர் திறன்களைப் பயன்படுத்தி உயர்நிலையை அடைய விரும்புகின்றான். மாறாக, மனக்கோளாறுடையவனோ மற்றவர்களை மனமுடையச் செய்வதன்மூலம் மகிழ விழைகின்றான். எனவே, ஒவ்வொரு மனிதனும் தன்தன் ஆற்றல்களில் வளர்ந்து மனவலிமைபெற்று செயற்படும் பொழுது, பிறர் நலம்கூடிய கூட்டுறவு, மனப்பான்மை, சமுதாயத்தின் மேலுள்ள அக்கறை போன்றவை வளர்க்கப்படும் பொழுது 'நான் + நீ = நாம்' நலம்பெறும்.

''நான்'' தை - மாசி 1983 — ஆசிரியர்

# மூன்றெழுத்து மஞ்சம்

அன்பே மகாசக்தி!
அன்பே இன்ப ஊற்று!
அன்பே இறைவரம்!

அன்பு என்றெழுத்துச் சொல்லினிலே நானகு எழுத்து இறைவன் — மனிதன் — சமூகம் ஆகிய மூன்றும் சங்கமமாகின்றன; சரித்திரம் படைக்கின்றது. உடல், பொருள், ஆவி அத்தனையும் பிரிந்தாலும் இறுதியில் எஞ்சிநிற்பது அன்பு மட்டுமே. மனிதர் அனைவரையும் மகிழ்விக்கும் சக்தி அன்பின் மகத்துவமே. மனிதனது ஆரம்பமும் முடிவும் மறைகளினதும் ஆரம்பமும் முடிவும் அன்பு ஒன்றே. இதனாற்றான்,

"அன்பே சிவம் என்கிறார்" திருமூலர்.
"அன்பே அல்லா" என்கிறார்கள் இஸ்லாமியர்கள்.
"அன்பே கடவுள்" என்கிறார் அருளப்பர்.
மண்ணோர் மொழி பேசினும் விண்ணோர் பேசினும்
அன்பு எனக்கில்லையேல் நான் ஒன்றுமில்லை
ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமுமானேன்" என்கிறார் சின்னப்பர்.

அன்பே அனைவரையும் வாழவைப்பது. அதுவே தவறுகள் நேராவண்ணம் நம்மிடம் புதைந்துகிடக்கும் நல்லகுணங்களையும் திறமைகளையும் வளர்க்க உதவுகின்றது. அன்பைக் கொடுத்து வாங்கிப் பழகிய நெஞ்சங்கள் இறைமகிழ்ச்சி பொங்கும் மஞ்சங்களாக மலர்கின்றன.

"நான்" பங்குனி - சித்திரை 1983 — ஆசிரியர்



# நீ வாழ பிறரைக் கெடுக்காதே

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்றுபேசும் உத்தமனைக் கெடுத்து உயர்ந்தோரைப் பகைக்கும், எளியோரைத் தாழ்த்தி வலியோரை வாழ்த்தும் உலகே உன் நிலை மாறாதா? உள்ளத்தை உள்ளபடியே பேசி, உத்தமர்களை உயர்த்தி, வளர்ந்தவர்களைப் பாராட்டி பலரும் பரவசம் பெறும் நிலை வளராதா? பழிமேல் பழிகூறி விழிகசிய வைப்பவர்கள் வாழ வழி காட்டமாட்டார்களா? அலங்கோலமாகத் தாம் வாழ்ந்து கொண்டே அடுத்தவரை அல்லற்படுத்தும் அவலநிலை ஒழியாதா? அநீதியை, அட்டூழியங்களை ஆதரிக்கும் அரக்கத்தனம் குறையாதா? அடுத்தவரின் அழிவினிலே அகமகிழ்வதும் எடுத்ததெற்கெல்லாம் மற்றவர்களின் மனத்தை உடைத்திடுவதும் மனநோயாளர்களின் செயல்களே. இவ்விதமாக மற்றவர்களின் நற்பெயரைக் கெடுப்பதன் மூலமாகவும் மற்றவர்களை அடக்கி ஒடுக்கிச் சிதைப்பதன் மூலமாகவும் பெரியராக முனையும் மோசடிக்காரர்களை "நரம்புத்தளர்ச்சியுடையவன், உயர்நிலையை அடைய முனையும் சமூக எதிரி" என்று உளவியலாளர் அட்லர் கூறுகின்றார். மனநோயாளர் உயர்நிலை அடைய முனைவதற்கும் மனப்பக்குவமுடையவர்கள் முன்னேற முனைவதற்குமிடையே பல வேறுபாடுகள் உள. முன்னையவன் மற்றவர்களை அழவைப்பதன் மூலம் சிரிப்பான்; மற்றவர்களை அழிப்பதன் மூலம் வளர எத்தனிப்பான். பின்னையவனோ மற்றவர்களை வளர்ப்பதன் மூலம் வளருகின்றான்; மகிழ்விப்பதன் மூலம் மகிழுகின்றான். இவனது வாழ்க்கையில்

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே",

என்ற தாயுமானவரின் கூற்று நிறைவு பெறுகின்றது.

"நான்" வைகாசி - ஆனி 1983 — ஆசிரியர்

## அர்ப்பணம்

''அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்றும் உரியர் பிறர்க்கு''

உள்ளத்தில் அன்பில்லாதவர்கள் சுயநலம் கொண்டவர்கள். அன்புள்ளம் கொண்டவர்கள் பிறர்க்காக எதையும்



செய்வார்கள். எதையும் கொடுப்பார்கள், தம்மை முழுமையாகப் பிறர்க்காக அர்ப்பணம் செய்வார்கள். இன்றைய சமூகத்தில் சுயநலம் என்னும் வியாதியால் பீடிக்கப்பட்டுத் தன்னுடையதும், சமூகத்தினுடையதும் வளர்ச்சியை குட்டிச்சுவராக்கும் தலைவர்களுக்கும், நண்பர்களுக்கும் சவாலாக அமைகின்றது 'தியாகம்' என்னும் பதம், வாழ்க்கையில் சில குறிக்கோள்களை அடைய, எமது இலட்சியங்களை உண்மைப்படுத்த, வளமான எதிர்காலத்திற்காக காத்துநிற்கும் நாம் வேண்டியவர்களுக்கு எம்மிடம் உள்ளத்தை, எம்மையே கொடுக்கும்போது நாமும், அவர்களும் நிறைவடைகின்றோம்.

விந்தை நிறைந்த மனித வாழ்விற்கு சிந்தையூட்டும் வர்த்தலையூர் உதயக்குமாரின் கட்டுரையும் நாம் கருவாகி, உருவாகி, வளர்ச்சியடைய அடிப்படையாக எம்மைத் தாங்கி நிற்பது தியாகம் என்ற A. S. சில்வாவின் சிந்தனை முத்துக்களும், மணமேடை ஏறிய சுமதியைப் போன்று, தூக்குமேடை ஏறும் தியாகிகளுடைய பரந்த மனம் தம் உயிரை துச்சமென அர்ப்பணிக்கும் அன்பு உள்ளங்கள் எமது இனத்தையும் சமூகத்தையும் வாழவைக்கின்றது என்ற கொன்ஸ்ரன்ரைனின் கற்பிதமும், நாம் புரியும் தியாக வாழ்வில் சுயநலம் கலந்த வாழ்வு ஒரு சிறிய வட்டமாகினாலும் தியாக உணர்வுத் துறவு நிறைந்த தியாகத்தை கடைப்பிடிக்கும்போது வாழ்க்கை முழுமை அடைகிறது என்ற தீப ஞானத்தின் தீர்க்கமான சிந்தனையும் தியாக உள்ளங்களை உருவாக்க உதவுகின்றன.

மடிவதில் வாழ்வும்,
கொடுப்பதில் திருப்தியும்,
துன்பத்தில் இன்பமும்;

பெறுவதுதான் வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவம் என்றால் ஒருவர் ஒருவருக்காக வாழும்போதுதான் வாழ்க்கை முழுமை அடைகின்றது; சமுதாயம் வளர்ச்சி பெறுகின்றது.

''நான்'' ஆடி - ஆவணி 1983 — ஆசிரியர்

# குமுறும் நெஞ்சங்கள்

உடல்கள் எரிந்தன. உடமைகள் பறிக்கப்பட்டன. உயிர்கள் பிரிந்தன. உரிமைகள் புதைக்கப்பட்டன. கட்டிய மனைவியின் கற்பு கணவன் முன்னாலே சூறையாடப்பட்டது. காளையரும், கன்னியரும், கர்ப்பிணித் தாய்மாரும், குழந்தைகளும் துண்டு துண்டாக வெட்டப்பட்டார்கள். வீட்டிலிருந்தோர் வீதிக்குத் துரத்தப்பட்டார்கள். வீதியில் நடந்தோர் துப்பாக்கியால் சுடப்பட்டார்கள். உரிமைக்குரல் எழுப்பிய குற்றத்திற்காகச் சிறைவாசம் சென்றோர் இரையானார்கள். அகதியாக வந்தோரின் அவலக்குரல் இன்னும் ஒலிக்கிறது. குமுறும் நெஞ்சங்களின் குரல் ஒலி இதோ!

அமைதிபுரத்தில் புதிதாகக் குடியேறிய ஒருவர்:



''ஐயோ பாருங்க, அங்க கொழும்பில் எங்களை அனை துரத்திப் போட்டுதென்னு இங்க வந்தா இங்கேயும் ஒரு தனியன் ஆளை என்னை இருக்க விடுகுதில்லை, மனுஷன் அங்க தொந்தரவுபடுத்தினான். இங்கே மிருகமல்லோ தொந்தரவு பண்ணுது''.

இலங்கையிலிருந்து தப்பி, இந்துமாக்கடலில் 28 மைல் தூரத்தையும் நீந்தியே இந்தியா சென்ற ஒருவரது கூற்றை இந்திய இதழ் ஒன்று கூறுகின்றது:

''எனது மனைவி என் கண்முன்னே கற்பழிக்கப்பட்டு, உடலுறுப்புக்கள் அறுபட்டு, சித்திரவதைக்குட்பட்டுத் துடிதுடித்துச் செத்தாள். எனது இரு கண்மணிகளான மகனும், மகளும் பள்ளிக்குள் வைத்து அடைக்கப்பட்டு, என்னெதிரே எரிக்கப்பட்டார்கள்''.

இவ்வாறு எம் அன்பு நெஞ்சங்கள் விம்மி விம்மி அழும் குரல் ஒலி தொடர்ந்து கேட்கின்றது. அவர்களின் அவலங்களைக் கேட்டு உள்ளங்கள் குமுறுகின்றன. கண்கள் நீரைப் பனிக்கின்றன. எனினும் பாலைவனங்களாக மாறிவிட்ட எம்மனைகள் சோலைவனம் பெறவேண்டும்.

''துக்கப்படுகின்றவர்களே, பொறுமையாயிருங்கள். விண்ணில் சூரியன் மேகங்களுக்குப் பின்னே மறைந்திருக்கிறான். ஆகவே மேகங்களுக்காக அஞ்ச வேண்டாம்'' என்கிறார் அறிஞர் லாங்பெல்லோ.

எனவே துன்பத்திலும் இன்பம், துயரத்திலும் மகிழ்வு என்ற நோக்கோடு மனவலிமை கொண்டு நாம் வாழ்க்கையை எதிர்கொள்வோம். அழிவிலிருந்து ஆக்கம், எரிதலிலிருந்து வெளிச்சம், சிறையிலிருந்து விடுதலை, சித்திரவதைப்படுவதிலிருந்து சுதந்திரம், சுரண்டப்படுவதிலிருந்து சுபீட்சம் பெறும் நாள் வந்தே தீரும். அந்நம்பிக்கை மனதில் துளிர்க்க மகிழ்ச்சி பரவட்டும்.

''நான்'' புரட்டாதி – ஐப்பசி 1983 — ஆசிரியர்

கொழும்பு தமிழ்ச் சங்கம்



நூலகம்

# உயர்வு உனதே!

வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் பின்வருவனவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அன்று கார்னிஜி கூறுகின்றார். எதிர்காலத்தில் நம்பிக்கை, வளைந்துகொடுக்கும் இயல்பு, விரைவாகத் தீர்மானத்துக்கு வரும் எண்ணம், புன்னகை செய்யும் முகம் என்பவையாகும். பொருத்தமான வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசுதல், வெற்றியில் வெறிகொள்ளாமலும், தோல்வியில் சோர்ந்து விடாமலும் வாழுதல், திறன்களை விருத்தி செய்தல், பிறரது திறமைகளைப் பாராட்டி பெருமனத்தோடு வாழுதல் போன்றவை பெருமகிழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் விழுதுகளாகும்.

வாழ்க்கையில் வளம்பெற, "இப்பொழுது சிறு விஷயங்களைச் செய். நாளடைவில் பெரிய விஷயங்கள் உன்னை நாடி நிறைவேற்றி வைக்கும்படி கேட்கும் என்று பாரசீக பழமொழி கூறுகின்றது. சிறுவிஷயம்தானே என்று அலட்சியப்படுத்தாது, சிறு விஷயங்களையும் சிறப்பாகச் செய்வதன்மூலமாக நிறைவு பெறலாம். எளிய காரியமாயினும் சரி, பெரிய சாதனையாயினும் சரி, அது உள்ளத்தின் நிறைவினின்றே எழுவது அவசியமாகின்றது.

வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்வுகளை நாம் எப்படி ஏற்றுக்கொள்கின்றோம் என்பதில்தான் மகிழ்ச்சி தங்கியுள்ளது. "வாழ்க்கையின் வெய்யிலில் கொஞ்சம் காய்ந்தும், மழையில் கொஞ்சம் நனைந்தும் வந்ததால் எனக்கு நன்மையே ஏற்பட்டிருக்கிறது" என்கிறார் லாங் பெல்லோ. ஏமாற்றங்கள், பிரச்சனைகள் ஏற்படும்போது அவற்றிலிருந்து தப்பி ஓட முற்படாது அவற்றை எதிர்கொண்டு வெற்றிகொள்வதே வாழ்க்கைக்கு புதுத்தென்பைக் கொடுக்கும்; வாழ்வில் ஒரு பிடிப்பை ஏற்படுத்தும். பிறரன்பு, இறை சிந்தை, கனிவு, கருணை, கரிசனை போன்றவை உள்ளத்துக்கு உரமாக அமையும்பொழுது உள்ளம் உவப்படையும். உலகம் உயர்வடையும்.

"நான்" கார்த்திகை – மார்கழி 1983 — ஆசிரியர்



# மாற்றங்களின் தோற்றம்

இன்பங்கள் வளராதா, துன்பங்கள் தொலையாதா என்று ஏங்கியோர், ஏழைகளாய் பிறந்த நாம் கோழைகளாய் மாள்வதா அன்றேல் வாழைகளைப்போல் வளர்வதா என்று சமுதாயத்துக் கேள்விக் குறிகளாய் அல்லல்படுவோர் அனைவரது வாழ்க்கையிலும் புதுமாற்றத்தைக் கொணர புத்தாண்டு பிறந்துவிட்டது. ஒரு புது உணர்வோடு வாழ்க்கைப் பிரச்சனைகளை அணுகவும் சென்றுவிட்ட சுமைகளால் எமது உள்ளங்களைச் சுமைப்படுத்தாது வந்துவிட்ட ஆண்டினில் அமைதி நிலைத்திட எளிமையான எண்ணங்களினால் மனத்தினை நிரப்பவும் 1984-ம் ஆண்டு அழைப்பிதழ் விடுக்கின்றது.

"இன்றைய இடப்பாடுகளுக்கான மனித பிரச்சனைகள் மாற வேண்டும். மாற்றியமைக்கப்பட வேண்டும். நிறுவனங்கள், செயற்பாடுகள், செயற்திட்டங்கள் ஆகியவற்றை மாற்றியமைப்பதற்கு முன்னர் மனித சிந்தனைகள் நல்வழியில் மாற்றியமைக்கப்பட வேண்டும்" என்ற பாப்பரசரின் புத்தாண்டுச் செய்தி, எமது சிந்தனைக்கு புதுமெருகூட்டுகின்றது. உலக அமைதியை நிலைநாட்ட உலக மக்கள் முன்வருவார்கள் என்ற நம்பிக்கை வளர்கின்றது.

"இன்னும் நிகழாதவை நிகழும் எனச் சோதிடம் கூறி, மக்கள் மனதில் தேவையில்லாத அச்சத்தை அதிகரித்து வரும் சோதிடர்கள் மலிந்துவிட்ட இக்காலத்தில் "நான்" உங்களது உள்ளத்தில் நம்பிக்கையையே வளர்க்க முனைகின்றான். அநீதி, அக்கிரமம் அழிந்து போகும். நீதி நிமிர்ந்து நிற்கும்; அன்பு அகிலத்தை ஆளும். மனிதன் தனது சொந்த சுயநலத்திலிருந்து, அகம்பாவத்திலிருந்து விடுதலைபெறும் காலம் அண்மித்துவிட்டது. மற்றவர்களுக்காக வாழ்வதன்மூலம் சமுதாய வளர்ச்சியில் மாற்றத்தைத் தோற்ற ஒவ்வொரு தனிமனிதனும் முயற்சி செய்ய ஆரம்பித்துவிட்டான். வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தது வீணாகுமா?

"நான்" தை – மாசி 1984 — ஆசிரியர்

# ஆரம்பம் அரங்கேறுகிறது

ஒவ்வொரு ஆண்டாக வருடங்கள் பல சென்றாலும் ஒரு வருடத்தில் வருகின்ற பருவங்கள்தான் மாறிமாறி வருகின்றன. இதே போல்தான் ஆயிரமாயிரம் மனிதர்கள் உலகில் வாழ்ந்தாலும் அவர்கள் எல்லோரும் கடந்துவந்த பருவங்கள் ஒன்றாகத்தானிருக்கின்றன. இதற்கு எவரும் விதிவிலக்கல்ல. ஒவ்வொருவரதும் ஆரம்பப் பருவம் குழந்தைப் பருவமே.

ஒருவன் வயதில், சிந்திப்பதில், அன்பு செய்வதில், உறவுப் பரிமாற்றத்தில் வளர்ந்துவிட்டான் என்றால் அவனது



நிகழ்காலத்திற்கு உருவம் கொடுத்தும், எதிர்கால வளத்தை நிர்ணயிப்பதும் அவனது குழந்தைப் பருவமே. "வளரும் பிள்ளை மண் விளையாட்டிலே தெரியும்" என்று முன்னோர் கூறியதுபோல் ஒருவனது ஆளுமையின் சிறப்புத்தன்மை அவனது குழந்தைப் பருவத்தில் அவன் பெற்ற அனுபவங்களிலும் அவன் வாழ்ந்து வருகின்ற சூழலிலும் தங்கியுள்ளது.

இவ்விதழில் பிள்ளைக்கனியமுதின் சுவையை எமக்கு ஊட்டுவதில் எமது அன்பு எழுத்தாளர்கள் முனைந்துள்ளார்கள். குழந்தை உருவாக்கலில் பெற்றோரினதும், பெரியோரினதும் பங்கினை எடுத்துக்கூறி உடல், உளம், ஆன்மீகம் ஆகிய பிரிவுகளில் சமமான வளர்ச்சி குழந்தை உருவாக்கலில் இன்றியமையாதது என்கின்றார் M. S. குரூஸ். அசையாத சிலைக்கும் சித்திரத்துக்கும் கூட வடித்தவன் பெயரோ வரைந்தவன் பெயரோ இருக்கும். ஆனால் அந்த மாலதியின் குழந்தைக்கு தகப்பன் இல்லையா? உணர்ச்சிமயமான முறையில் "நாம காணிக்கை" தருகின்றார் திருமதி கந்தசாமி அவர்கள். மனித வாழ்க்கையில் தொடரும் உறவுகளைச் சிதையவிடாது வாழ்க்கை வாழ்வதற்கே எனத் தானும் வாழ்ந்து பிறரையும் வாழ வைக்கும் பாங்குடையோராக வளர்ந்தவர்கள் வாழ்வது குழந்தைப் பருவத்தில் கற்ற சிறப்புப் பயிற்சியினாலேயாகும் என்று கூறி குழந்தைப்பருவ வளர்ச்சிப் படிமுறைகளை தெளிவுபடுத்துகின்றார் செல்வி சாந்தலட்சுமி. நாம என்றுமே குழந்தை உள்ளம் கொண்டோராய் வாழ வேண்டும் என்று அறைகூவல் விடுத்து தமது குழந்தை உள்ளத்தை கவிதைமூலம் வெளிப்படுத்துகின்றார் யாழ் வளர்மதி.

இவ்விதமாக இன்னும் பலர் குழந்தை உருவாக்கலில் ஏனையோரது ஆக்கபூர்வமான பங்களிப்பினை இவ்விதழில் எடுத்துரைக்கின்றார்கள்.

அனைவர்க்கும் நன்றிகளும் நல்வாழ்த்துக்களும்.

"நான்"    பங்குனி – சித்திரை 1984    — ஆசிரியர்

# இளமை ஊஞ்சலாடுகிறது

"செய்ய இயலாததில் சினங் கொள்வது தவறு
செய்ய முடிந்ததைச் செய்ய முயற்சிப்பது நல்லது"

என்கிறார் ரோமன் ரோலான்.



உழைத்து முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் எதுவுமில்லாது தெருத்தெருவாய் சுற்றுவோர் சிலர். அமைச்சல் இல்லாத சொல் வார்த்தை கேட்காத 'தறுதலைகள்' என்று பட்டம் பெறுவோர் சிலர், அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு, நிதானமிழந்து செயற்படுவோர் சிலர். இவ்வாறு ஏச்சுப்பட்டு, ஏளனப்படுத்தப்பட்டு வாழும் இளைஞர்கள் ஒருபுறமிருக்க நல்லவர்கள், வல்லவர்கள் எனப் போற்றப்படுவார்கள். இரக்க சிந்தை படைத்த இலட்சியவாதிகள் எனக் கணிக்கப்படுபவர்கள், இளைஞர் வட்டத்திலே இருக்கத்தான் செய்கின்றார்கள்.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்"

என்ற வள்ளுவரின் வார்த்தைக்கு வடிவம் கொடுக்கும் இளைஞர்கள் இன்றும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இவ்வகையில் இன்றைய இளைஞர்கள் சிந்திக்கிறார்கள், என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றுதான். சிந்தனையின் ஊற்று அவர்களிடம் இருந்தாலும் அதனை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் அல்லது நடைமுறைக்கு இட வேண்டும் என்பதில் வேறுபாடு உடையவர்களாக காணப்படுகின்றார்கள்.

எனினும் இளமையினை இளைஞர்மட்டும் தமது தனிச் சொத்து என்று சொந்தம் கொண்டாட முடியாது. அது எல்லோரினதும் பொதுச் சொத்தாக பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். வயதின் எல்லையைத் தாண்டியதால் எல்லோர உள்ளங்களிலும் இளமை ஊஞ்சலாடுகிறது என்று கூறுமளவிற்கு மனித மனங்கள் இளமைப்படுத்தப்படும்போது சமுதாயத்தில் பசுமையான பரஸ்பர உறவாடலையும், இனிமையான பரிவன்பினையும் கண்டுணரலாம். இளமையின் இராகங்களை இசை மீட்டலாம்.

"நான்" வைகாசி – ஆனி 1984 — ஆசிரியர்

# இரண்டு கண்கள் இரண்டு காட்சி காண முடியுமா?

ஓர் உள்ளம் இன்னொரு உள்ளத்தின் வளர்ச்சிக்காக, மகிழ்ச்சிக்காக இரு ஆட்கள் ஒருமித்த மனத்தோடு ஒருவரை ஒருவர் பங்கிடு செய்தலே திருமணம் ஆகும். ஒருவர் ஒருவருக்காக இருவர் செய்துகொள்கின்ற தியாகத்தின், தூய அன்பின் வெளிப்பாடே தாம்பத்தியத்தின் தாற்பரியமாகும். திருமணத்திற்கு உருக்கொடுப்பது உண்மையான அன்பாகும். அவர(ள)து நலனே தனது நலன் என்றும் அவர(ள)து இன்பமே தனது இன்பம் என்றும் அவர(ள)து வளர்ச்சியே தனது வளர்ச்சி என்று இருவரும் அவ(ர்)ள் மையமாக தமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும்போது தாம்பத்திய வாழ்க்கை இனிமையடைக்கும். கொள்கை ரீதியிலே, கருத்து ரீதியிலே பண்பாட்டு ரீதியிலே, பணிந்து நடக்கும் தன்மையிலே ஒற்றுமை காணப்படும்பொழுது இல்லறம் நல்லறமாகக் காட்சியளிக்கும். அந்தவேளை கருத்து வேறுபாடுகள் காணப்படினும் அவற்றைப் பெரிதுபடுத்தாது பெருந்தன்மையோடு நடந்துகொள்ளும்பொழுது விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையில் விளங்கிக்கொள்ளும் செயலாற்றலில் வளர்ச்சியுறும் பொழுது வாழ்க்கை வளம்பெறும். இதயமும் இதயமும் இணைந்த நிலையில் மலருகின்ற இல்லற வாழ்க்கையில் சுமைகள் கூட சுவையாகவே தோன்றும்.

வாழ்க்கையில் ஏற்படும் இன்னல், இடைஞ்சல்கள், வறுமை, பிணி, தவறுகள் போன்ற அனைத்தும் மனப் பொருத்தத்தினால் விளைவுற்ற நெரிசலினால் மறைவுற்றுவிடும். இரண்டு கண்கள் சேர்ந்து ஒரே காட்சியைக் காண்பதுபோல இரண்டு இதயங்கள் சேர்ந்து ஒரே அன்பினைப் பகிர்ந்து ஒரே இன்பத்தை அனுபவிக்கும்பொழுது இறைமாட்சி இல்லறத்தில் துலங்கும்.

''நான்'' ஆடி - ஆவணி 1984 — ஆசிரியர்



# திட்டமிட்டுக் கட்டப்படுகின்றது

நீ எனக்கு முன்னே நடந்தால் நான்
உன்னை இழந்துவிடக் கூடும்
நீ என் பின்னே நடந்தால் நான்
உன்னை மறந்துவிடக் கூடும்
எனவே, என் கண்ணே என்னுடன்
சரிசமமாக நடந்து வா''

— இது ஓர் ஆங்கிலக் கவி

அடக்குதலும் அடிமைப்படுத்துதலும் அநாகரிகமான செயற்பாடுகள். உபத்திரவம் கொடுத்தலும் ஊறு விளைவித்தலும் வேண்டப்படாத வினை எச்சங்கள். அன்பு செய்தலும் அள்ளிக் கொடுத்தலுமே குடும்ப நல்லுறவிற்கு அடித்தளமாகும். உடல் - பொருள், உள்ளம் – ஆன்மீகம் சார் பரிமாற்றமே (Transaction) பகுத்தறிவுமிக்க, பரிசுத்தமான குடும்ப வாழ்க்கைக்கு உயிரூட்டம் அளிப்பதாகும்.

ஒருவர் ஒருவருக்கு வாழ்வு வழங்குகின்ற, ஒருவரை ஒருவர் வாழ வைக்கின்ற நிபந்தனையில்லாத தியாக அன்பினைக் (Unconditional Sacrificial Love) கொண்டு திட்டமிட்டுக் கட்டப்பட்ட குடும்பத்தில், அதிகார மிரட்டலோ, ஆணவச் செருக்கோ இருக்கமாட்டாது; அந்தரங்கங்கள் அம்பலப்படுத்தப்படமாட்டாது; சந்தேகங்கள் சஞ்சரிக்காது. அங்கு சம உரிமை, சம மதிப்பு, சம பகிர்வு, சம மகிழ்ச்சி போன்றவற்றை வெளிக்காட்டுகின்ற ஜனநாயக முறையே நடைமுறைப் படுத்தப்படும். பெற்றோர் – பிள்ளைகள், கணவன் – மனைவி இவர்களிடையே விளங்கும் தன்மையும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் தன்மையும், விவேகமாயும், வேகமாயும் வளர்க்கப் படும். எனவே, அங்கே அமைதியும், ஆனந்தமும் கரைபுரண்டோடும்; தன்மானமும், தன்மதிப்பும் கௌரவிக்கப்படும்.

''நான்'' புரட்டாதி - ஐப்பசி 1984 — ஆசிரியர்

# நினைவெல்லாம் நிலைத்து நிற்பவர்கள்

'நீண்ட நாள்' வாழ வேண்டும் என்று எனக்கு விருப்ப மில்லை. நாட்டுப் பணிக்காக என் உயிரைத் துறப்பதில் பெருமைப்படுகின்றேன். இன்று நான் இறந்தாலும் என் ஒவ்வொரு சொட்டு இரத்தமும் நாட்டின் வளர்ச்சியை அறிமுகப்படுத் தவே உதவும், என்று கூறிய அன்னை இந்திரா அமரராகிவிட் டாள். இமயம் சரிந்துவிட்டதென்று இதயங்கள் வெடித்தன.



தாயை இழந்துவிட்ட தனயர்களாய் தமிழ் நெஞ்சங்கள் தவித்தன. அரசியல் அறிவிலும், அனுபவத்திலும் முதிர்ந்த வளாய் முதுமையில் முழுமை எய்திய பெருமை அவளையே சாரும்.

இந்த ரீதியில் ''நடமாடும் தெய்வம்'' என வர்ணிக்கப் படும் அன்னை திரேசா, முதியோர்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் ஊடகமாகத் திகழ்கின்றார். ஏழை எளியவர் களின் திருக்கோவிலாகி, அன்புக் களஞ்சியமாக விளங்குகின்ற இவள்,

> ''வையத்து வாழ்வாங்கு வாழ்பவன்
> வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

என்ற வள்ளுவரின் வாக்கினை நிறைவுசெய்து கல்லா மாதர்க்கும், இல்லா மாதர்க்கும் நிறைமகிழ்வினை அளித்து வருகின்றாள்.

நினைவெல்லாம் முதியவர்கள் நிலைத்துநிற்க வேண்டு மென்றால் அவர்கள் வெறுமையையும் விரக்தியையும் பல வீனத்தையும், பகைமையையும் வெளிக்காட்டும் மட்டாகமான மனிதர்களாகக் காணப்படாது முழுமையையும், மகிழ்ச்சியை யும், பலத்தினையும், அன்பினையும், வெளிப்படுத்தும் மகத்துவ மானவர்களாக வாழ்ந்துகாட்ட வேண்டும்.

இவர்கள் கொடியிலே தேடப்படாது கிடக்கும் வெறும் சடங்கள் அல்ல; பயன்பாட்டின் பின்னர் சமுதாயச் சாக் கடையிலே பரிதாபமாக வீசப்படும் பகடைக் காய்கள் அல்ல. மாறாக உயர்ந்தவர்களாய், உத்தமர்களாய் சமுதாய வளர்ச்சி யினை நிர்ணயிக்கின்ற பலம்வாய்ந்த தூண்கள், கோபுரத் தீபங்கள் இவர்களே!

''நான்'' கார்த்திகை - மார்கழி 1984 — ஆசிரியர்

## வாடுகின்ற மக்களுக்கு வாழுகின்ற பாதை

இளைஞர் ஆண்டு என மலர்ந்துவிட்ட இவ்வாண்டில் இதயங்கள் சிலவே சிரிக்கின்றன; இனிமையை உணர்ந்து மகிழ்கின்றன. இருட்டினில் வாழும் மனிதருக்கு ஒளிவிளக்கை ஏற்றிவைப்பவர் யார் என்று ஏக்கத்தோடு ஏனைய நெஞ்சங்கள் வாழவழியின்றி காணப்படுகின்றன. நீரிலே எழுதப்பட்ட நிலை வலைகள்போல் இளம் உள்ளங்கள் ஊசலாடுகின்றன. ஏழையாய் எளியவனாய் புறக்கணிக்கப்படுபவனாய், புரியாத புதிராய் ஏன் என்னைப் படைத்தாய் என்று ஏற்றமிகு வாழ்வைநோக்கி அங்கலாய்க்கின்றன.

'இறப்பது இயற்கையின் நியதி' என்பதை எமது நாட்டு நிகழ்வுகள் மாற்றிவிடுகின்றன. தமிழர் இன்று உயிர்பிழைப்பது இராணுவத்தின் இரக்கத்தில் தங்கியுள்ளது என்று கூறுமள விற்கு நிலைமை மோசமாகிவிட்டது. இளைஞர் ஆண்டு என பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் இவ்வாண்டில் எம் இளைஞர்கள் எங்கே, வயல்களிலும், காடுகளிலும், வீடுகளிலும் பதுங்கி ஒதுங்கி வாழும் இளைஞர் ஒருபுறம்; வெளியிலே வந்து கண்ணீர் அஞ்சலி பெறுவோர் ஒருபுறம்; வெளிநாடு சென்று வேடிக்கை பார்ப்போர் மறுபுறம். எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்று வதுபோல நிலவுகின்ற மோசமான நிலைமையைப் பயன்படுத்தி தம்மைவளர்க்க முற்படுகின்ற பதுக்கல் சுரண்டல்கார வர்த்தகர் களின் செயற்பாடுகள் மேலும் எமது காயங்களை இரணமாக்கு கின்றன. இதயமற்றோரின் செயற்பாடுகள் இரட்டிப்பாகின்றன. கற்பழிப்புகளும், கழுத்தறுப்புகளும் சாதித் தகராறுகளும் சீதனச் சீர்கேடுகளும் குடிவெறி பிதற்றல்களும், குதர்க்கப் பேச்சுகளும் குறைந்தபாடில்லை. தலைமைத்துவம் தலையிழாக நிற்கிறது. இவ்விதமாக இனிமை உணர்வுகள் மரத்துப்போன நிலையில், அன்பு நெஞ்சங்களை இழந்து அந்தரித்த நிலையில் வாடுகின்ற மக்களுக்கு, வாழுகின்ற பாதையினை 'நான்' தன் 11 ஆம் ஆண்டிலும் காட்டுவான் என்பதே எமது நம்பிக்கை. நொந்துபோன இதயங்களை வெந்துபோகாமல் அவனது நல் வார்த்தைகள் துணைபுரிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களை தமிழன்னை சார்பில் நல்குகின்றோம்.

''நான்'' தை - மாசி 1985 — ஆசிரியர்

## உருளுகின்ற உலகில் மருளுகின்ற மனிதன்

உருளும் உலகினில் மருண்டு வாழ்ந்திடும் மனிதர்கள் மற்றவர்களை மருட்டி, வெருட்டி, உருட்டி வாழ்வதை அவ தானிக்க முடிகிறது. மனிதனில் காணப்படும் மிருகத்தனத் தின் உந்துதலினால் உருவாக்கப்படும் பழிக்குப்பழி வாங்கும் மனப்பான்மையினால் உலகம் இருளடைந்து வருகிறது. பெற் றோர்களினால் பிள்ளைகளும், பிள்ளைகளினால் பெற்றோரும், அதி காரிகளினால் குடிமகனும், குடிமகனால் அதிகாரிகளும், கன்னி யர்களினால் காளையர்களும், காளையர்களினால் கன்னியர்களும் இவ்வாறாகப் பல்வேறு அடிப்படையில் பழிவாங்கப்பட்டு வருவது இன்றைய சமுதாயத்தில் நாம் காணும் கவலைக்குரிய காட்சிகளில் ஒன்று. எமது அன்றாட நிகழ்ச்சிகளும், திரைப் படங்கள் போன்ற மக்கள் தொடர்புச் சாதனங்களும் பழிக்குப் பழி வாங்கும் செயற்பாட்டை நியாயப்படுத்துவதாகத் தோன்றுகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் மனிதனை மிருகத்திலிருந்து வேறுபடுத்திக்காட்டும் மனிதத்தனம், மன்னிக்கும் மனப்பான் மை, அன்பு செய்யும் குணம் போன்ற பண்புகள் எங்கே? மனிதனைவிட்டு அவை அகன்றுவிட்டனவா? மன்னிக்கத் தெரி ந்த உள்ளம் மாணிக்கக் கோயில் என்றான் ஒரு கவிஞன். எனவே, எமது உள்ளங்கள் தெய்வங்கள் வாழும் இல்லங்களாக மனிதன் தன் மனிதப் பண்புகளுடன் சீராக வாழ, பழிக்குப் பழி வாங்குவதற்குப் பதிலாக மன்னித்து மகிழ்ச்சியாக வாழ் வோமாக.

''பழிக்குப் பழி வாங்கின் பயங்கரம் தொடரும்;
பகைவனை மன்னிப்பின் அமைதி நிலவும்.''

''நான்'' பங்குனி - சித்திரை 1985 — ஆசிரியர்

# எதையும் தாங்கும் இதயம்

''இரவும் பகலும் இரண்டானால்
இன்பமும் துன்பமும் இரண்டானால்
உறவும் பிரிவும் இரண்டானால்
உள்ளம் ஒன்று போதாது''

— என்று பாடுகின்றான் ஒரு கவிஞன்

உறவில் ஏற்படும் இன்பத்தை அனுபவிக்கும் உள்ளம் பிரிவில் ஏற்படும் துன்பத்தைத் தாங்கமுடியாது தவிக்கின்றது. பிரிவு இப்படித் துயரத்தைத் தரும் என்று தெரிந்திருந்தால் நாங்கள் ஆரம்பத்தில் உறவு கொள்ளாமலே இருந்திருக்கலாம், என்று எண்ணத்தோன்றும் அளவிற்கு பிரிவின் வேதனை ஆழமானதாகக் காணப்படுகின்றது.

உறவில் இன்பம் காணும் ஒவ்வொருவனும் பிரிவையும் அனுபவித்துத்தான் ஆகவேண்டும். பிரிவின் துயரில்தான் உறவின் நெருக்கம் உணரப்படுகின்றது. நெருக்கமான உறவுகளைத் தொடர்ந்து வரும் பிரிவு மனிதனை உளரீதியாகவும் சிலவேளைகளில் உடல்ரீதியாகவும் ஊனப்படுத்திவிடுகின்றது. இதன் விளைவுகள் பாரதூரமானவையாக அமைவது அன்றாட வாழ்வில் ஏற்படும் அனுபவங்களிலிருந்து புலனாகின்றது. பிரிவின் கொடுமையைத் தாங்கமுடியாதலால் தற்கொலைகள் உடல்-உள நோய்கள், வாழ்க்கையில் பிடிப்பற்ற போக்குகள், வாழ்க்கையில் நொந்துகொள்ளும் தன்மைகள் போன்றன நாளுக்குநாள் அதிகரித்து வருவது பரிதாபகரமான இன்றைய சூழலை எடுத்துக்காட்டுகின்றது.

எனவே, வேதனையான நிகழ்வுகளிலிருந்தும் சாதனையை நிலைநாட்ட துயரமான சம்பவங்களிலிருந்தும் மனமகிழ்ச்சியினைத் துளிர்விக்க, பிரிவுதரும் அனுபவங்களிலிருந்தும் மனித உறவினைப் பலப்படுத்த எதையும் தாங்கும் இதயத்தினை உதயமாக்குவோம்; எழிலான உலகம்தனை உறவில் காணுவோம்.

''நான்'' வைகாசி – ஆனி 1985 — ஆசிரியர்



18475

# வெறிகள் நெறிப்படுத்தப்படுகின்றன

அளவுக்கு மீறிய எதுவும் வெறியாகும். சுமுகமான மனித வாழ்க்கையில் சுவையற்ற சம்பவங்கள், தாங்கமுடியாத வாழ்க்கைச் சுமைகள், சாதனைக்குச் சவால்விடும் வேதனைச் சுவடுகள், மனிதனை வெறிபிடித்தவனாக மாறவைக்கின்றன. விளைவு மனித உயர் பண்பாடுகளை, மனித மாண்பினை, மனித மதிப்பீடுகளை மறந்த நிலையில் கீழ்த்தரமான முறையில் செயற்பட ஆரம்பிக்கின்றான். தனது சிந்தனைகளை செயற்பாடுகளை சீர்தூக்கிப் பார்க்காது கண்மூடித்தனமாக காலத்தைக் கழிக்கின்றான். தான்தோன்றித்தனமாகத் தனித்தியங்குகின்றான்.

ஒருமனது ஆரோக்கியமற்ற சிந்தனைகள், அதன் வழித் தோன்றும் செயற்பாடுகள் அவன் ஏதோவொரு வெறியினால் அடிமைப்படுத்தப்பட்ட நிலையில் வாதைப்படும்பொழுது அவன் மட்டுமன்றி அவனோடு சேர்ந்தவர்களும், சமுதாயமும் கூட்டாக உடல், உளத்தாக்கத்தினால் அல்லல்படவும் நேரிடுகின்றது.

எனவே, ஒவ்வொரு மனிதனும் தனது மனித மகத்துவத்தைப் புரிந்து இகம்தனில் நிறைவுபெறுவதற்கு அகமதனை எதற்கும் எவருக்கும் அடிமையாக்காது, ஆரோக்கியமான சிந்தனைகளை உள்ளத்தில் ஆழப்புதைத்து வாழ்தல் அவசியமாகும். வாழ்வின் இனிய அனுபவங்கள், நல்ல நண்பரோடு கொண்ட உறவின் அதிர்வுகள் உயர் இலட்சியத்தை நோக்கிய அசைவுகள், அறக்கோட்பாடுகள் போன்றவற்றினால் சிந்தனைக்கு நல் உணர்வூட்டுவதன்மூலம் கீழான வெற்றிகளிலிருந்து விடுதலை பெறலாம்.

''நான்'' ஆடி - ஆவணி 1985 — ஆசிரியர்

# ஏன் இன்னும் தாமதம்?

நீங்கள் முக்கியமானவர்கள். நீங்கள் எந்தவகையிலும் மற்றவர்களுக்கு சளைத்தவர்கள் அல்ல. உங்களை நீங்கள் சிறைப்படுத்தும்பொழுது எப்படி நீங்கள் விடுதலை இன்பத்தை அனுபவிக்க முடியும்? பணம், பதவி, அந்தஸ்து, அதிகாரம், சமூகம், சூழல் சார்பாக கட்டுப்பட்டு நிற்கும்பொழுது மனம் அடிமை நிலையிலேயே காணப்படும்.

முயலாதது ஒன்றும் முடியாதே! முயற்சியினால் முடியாதது ஒன்றுமில்லை. கூலிக்குப் படகு ஓட்டி, செல்வந்தர் வீட்டிலே எடுபிடி வேலைசெய்து ஈற்றிலே அமெரிக்க அதிபரானார் ஆபிரகாம் லிங்கன். வறுமையின் பிடியிலும் தங்கள் முயற்சியினால் முன்னுக்கு வந்த மகான்கள் பட்டியலில் இடம்பெறும் கர்ம வீரர் காமராஜர், அச்சுக்கோர்ப்பாளராக இருந்த ம. பொ. சிவஞானம், வீடுகளில் பத்திரிகை வியாபாரம் செய்த வி. ஜி. சந்தோஷம், நாடகக் கொட்டகையில் சோடா விற்ற கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், தொழிலாளியின் வயிற்றில் பிறந்து ஜேர்மனியின் தலைவராகத் திகழ்ந்த லெனின் போன்று இன்னும் எத்தனைபேர் இயலாமை என்பதை இல்லாமல் செய்து முன்னேற்றப் பாதையிலே முழுமூச்சாக முன்சென்றார்கள்.

ஏக்கத்தின் தாக்கத்திலிருந்து விடுபட்டு ஊக்கத்தோடு ஆக்கத்தினை மேற்கொள்ள அடிமைப்படுத்தப்பட்ட மனச்சிறையை உடைத்தெறிந்துவிட்டு வெளியே வாருங்கள். உங்களது முக்கியத்துவத்தை, உங்களது உயர்ந்த இயல்பான தன்மையினை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பம் அளியுங்களேன்.

''தாழ்வுச் சிறையினைத் தகர்த்தெறியுங்கள்;
தன்மானமுள்ளவராய் வாழ முனையுங்கள்.''

'நான்'' புரட்டாதி – ஐப்பசி 1985 — ஆசிரியர்



# விடிவை நோக்கி . .

எண்ணற்ற எதிர்பார்ப்புகளையும் எதிர்பாராத ஏமாற்றங்களையும் எதிர்கொள்ளுவதே மனித வாழ்க்கையாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்பொழுது ஏற்றம்பெறும் மனித உள்ளம் அவை முறியடிக்கப்படும்பொழுது சீற்றம்கொள்வது சகஜமாகும். எனினும், மனிதன் மற்றவர்களோடு கொள்ளும் தொடர்பின் தாக்கம் ஆரோக்கியமானதாகக் காணப்படின் எதிர்ப்புகளையும் ஏமாற்றங்களையும் தாங்கிக்கொள்வது இலகுவாகின்றது.

எதிர்பார்த்தபடி நிகழ்வுகள் அமையாதவிடத்து, அவை கூறும் படிப்பினையை அலட்சியப்படுத்தும் மனநோக்கு எழலாம். அது தவறு. கற்பனையும் கடின உழைப்பும் தீவிரமான சிந்தனையும் துணிச்சலான செயற்பாடும் இணைந்த எதிர்பார்ப்பில் மலர்வதுதான் வெற்றிகரமான வாழ்க்கை. அரிய சிந்தனைகளுடன் புரட்சிகரமான வாழ்க்கையை மேற்கொள்ளமுனையும்பொழுது பெரிய ஆபத்துகளும் பாரிய இழப்புகளும் ஏற்படலாம். உரிய நேரத்தில் அவற்றை எதிர்கொள்ளும் ஆற்றல் படைத்தோரே எரியும் விளக்குகளில் மடியும் விட்டில்களைப்போன்று மாளாது, ஒளிரும் தீபங்களாக மிளிர முடியும். ஒரு புது யுகத்தை எதிர்பார்க்கும் கவிஞனின் குரல் உங்கள் உள்ளங்களில் ஒலிக்கட்டும்.

''விடியலுக்கில்லை தூரம் விடியும் மனதில் இன்னும் ஏன் பாரம்
உன் நெஞ்சம் முழுவதும் வீரம் இருந்தும் கண்ணில் இன்னும் ஏன் ஈரம்?''
யுத்தங்கள் தோன்றினும் வெடிச்சத்தங்கள் தொடரினும்
ரத்தங்கள் சிந்தினும் பாதை மாறலாமா?
பயணங்கள் தொடரட்டும்! புதுயுகம் மலரட்டும்!!

''நான்'' கார்த்திகை – மார்கழி 1985 — ஆசிரியர்

## பாதை மாறிய பயணங்களா?

இரைபோடும் மனிதருக்கே இரையாகும் வெள்ளாட்டைப் போன்று உதவி செய்ய வந்து உபத்திரவம் கொடுக்கின்ற, உரிமையினைப் பாதுகாக்க என்று வந்து உயிரினையும் பறிக்கின்ற மோசடிக்காரரையே இன்றைய சமுதாயம் எதிர்கொள்கிறது. பாதை மாறிய பயணங்கள் தொடர்கின்றன; திசைமாறிய சிந்தனைகள் சந்திக்கின்றன. ஊரை மாற்றுவோம் என்று உலகையே ஏமாற்றுகின்ற மீட்பர்கள் அதிகரிக்கின்றார்கள். எனினும் விடிவெள்ளிகள் மேகங்களினால் மறைக்கப்படினும், அவை ஒளி தருவதுண்டு அல்லவா? அதேபோல ஏற்றிய தீபங்கள் ஒளிரவேண்டும். போற்றிய திருவாய்கள் மகிழ வேண்டும். சமதர்ம புதுயுகம் மலரவேண்டும். தியாகங்கள் தளராதிருக்க நியாயங்கள் நிலைக்க வேண்டும். மாறிவரும் உலகை மாற்றுகின்ற இதயங்கள் மனித மாண்பிற்கு மதிப்பளிக்க வேண்டும்.

இருட்டினில் வாழும் மனிதர்களே வெளிச்சத்திற்கு வாருங்கள். உருண்டோடும் உலகில் திரண்டோடும் மக்கள் தினந்தோறும் வெருண்டோடுவதா? அல்லற்பட்டு அகதிகளாய் அழுவதற்கென்றா பிறந்தோம் நாம்? இல்லவே இல்லை. அழுகையும் சிரிப்பும் அனைவருக்கும் உரியது. ஆனால், உளப் பக்குவத்தோடு உவகை பொங்கும் வாழ்வை, அமைப்பதே புத்தாண்டு விடுக்கும் சவாலாகும்.

இதயவானில், உதயமான புதிய மேகம், மலரும் இந்த அனைத்துலக அமைதி ஆண்டில் இனிய மழையாய் மகிழ்வைப் பொழியவேண்டி வாழ்த்துகின்றோம்.

எழுத்துலக ஏணிப்படிகளான எழுத்தாள இதயங்களுக்கும்
வாசக இதயக்கனிகளுக்கும் இனிய புத்தாண்டு
— தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

''நான்'' தை - மாசி 1986 — ஆசிரியர்



# பாதுகாவலனில் இருந்து

அன்பு நெஞ்சன்

## விழித்தெழுங்கள்!

''நானே உலகின் ஒளி;
என்னைப் பின்செல்பவன் இருளில் நடவான்,
உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான்'' (அரு. 8:12).

அன்புத் தம்பி, தங்கையர்க்கு, நல்வாழ்த்துக்கள்.

இளம் எண்ணங்கள் இறை வண்ணங்களாக இதயத்தில் உதயமாகட்டும். வண்ண விழிகள் இறையன்பு மொழியைப் பேசட்டும். உள்ளத்து உரசலினை உதடுகள் வெளிப்படுத்த, கண்ணை இமை காப்பதுபோல் களங்கமற்ற கருத்தினை எண்ணமதில் கொண்டே வாழ்த்திட நீங்கள் முன்வருவீர்கள் என நம்புகிறேன். தீதை வெல்லும் பாதையிலே வாதைப்படும் போதெல்லாம் தூதுகொண்டு நான் வருவேன் - நன்மை ஒன்றே வெல்லும் நூனிலமே சாட்சி என்று.

உலகமெல்லாம் மறைந்து நிற்கும் பரம்பொருளே
உங்கள் உள்ளம்தனில் இல்லம் அமைத்திடவே
உண்மை அன்பு, உயர் நீதி உரைத்து
உத்தமராய் வாழ்ந்து எந்நாளும் மகிழ்ந்திடுவீர்.

அன்றாட வாழ்க்கையிலே ஆடம்பர அலங்கோலங்கள், போலிகளே வேலிகளாய் மாறிவரும் அனர்த்தங்கள், குட்டையிலே ஊறிப்போன மட்டைகளாய் எழுச்சியினை எதிர்க்கும் பழமை விரும்பிகளின் பித்தலாட்டங்கள். நாற்றமிகு சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் வேளையில் ஆற்றல்மிகு இளைஞர்களே இன்னும் தூங்குகின்றீர்களா?

விழித்தெழுங்கள்! எழுந்திருங்கள்!

வீறுநடைபோட்டு இறையவனின் துணையோடு அணையாத விளக்குகளாய் அணிசேர வாருங்கள்.

உங்களோடு தொடர்புகொள்ள இச் சந்தர்ப்பத்தை தந்த இறைவனுக்கு நன்றிகூறி, உங்களது பதில்காணத் துடிக்கின்றேன்.

''பாதுகாவலன்'' 9 - 1 - 1987 அன்பு அண்ணு, வி. பி,

## முன்னேறுங்கள்!

''பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகின்றீர்களோ அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்'' (லூக். 6:31)

அன்புத் தம்பி, தங்கையர்க்கு, நல்வாழ்த்துக்கள்.

நல்லபடி வாழ்ந்திடவே நான்தோறும் நீங்கள் முயற்சி எடுத்து வருகின்றீர்கள் என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். உங்களது வளர்ச்சியே எனது மகிழ்ச்சி என்று நினைவூட்டியுள்ளேன். அந்தவகையில் நீங்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களை வளர்ப்பதன்மூலமே வளர முடியும், மற்றவர்களுக்கு வாழ்வு கொடுப்பதன்மூலமே வாழ முடியும் என்பதை உணர்ந்து செயற்படுகின்றீர்கள். இறைவனுக்கு நன்றி.

ஒழுங்காக வளர்ந்திடவும் ஒற்றுமையாக வாழ்ந்திடவும் தீவிரமாக முனைந்து செயற்படும் உங்களை எதிர்த்துப் பல தீய சக்திகள் எழலாம். எனினும், அவை நிச்சயமாய் அழிவுக்குரியவையே. அவற்றை எண்ணி, சிறிதும் ஏக்கமுறாது, 'முயற்சியே முன்னேற்றமாகும்; வாழ்க்கை வாழ்வதற்கே' என்பதை ஏற்று, தொடர்ந்து முன்னேறுங்கள். எச் சந்தர்ப்பத்திலும் தீய சக்திகளைக் கண்டு, பயந்து, தளர்வுற்று, பின்வாங்க வேண்டாம். தீய சக்திகள் வெல்வதுபோலத் தோற்றம் தரலாம். ஆனால் அச்சமின்றி, எதிர்நீச்சல் போடுங்கள். நிச்சயம் வெற்றி உங்களதே.

''பாதுகாவலன்'' 16 - 1 - 1987 அன்பு அண்ணு வி. பி.

# அன்பு செய்யுங்கள்!

பையன்கள் இருவர் கோவிலுக்கருகில் ஒருவர்மேல் ஒருவர் புரண்டு சண்டைபிடித்துக்கொண்டிருந்தார்கள். அருகே வந்த குரு, ''தம்பிமாரே, இப்ப கொஞ்சம் முன்னர்தானே பிரசங்கத்தில் 'அயலவரை அன்பு செய்யுங்கள்' என்ற கிறிஸ்துவின் கட்டளையை நினைவுபடுத்தினேன். அதற்குள் மறந்துவிட்டீர்களா?'' என்றார்.

''ஆமா. ஆனால் கீழே கிடக்கிறவன் என்ர அண்ணன்'' என்று சொல்லிக்கொண்டு முதுகில் மீண்டுமொருமுறை குத்தினான்.

அன்புத் தம்பி, தங்கையர்களே,

பிறரை மன்னிப்பதற்கு ஏற்புடைய எத்தனையோ சம்பவங்கள் உங்களது வாழ்க்கையில் இடம்பெறுகின்றன. அவை எல்லாம் உங்கள் பெருந்தன்மையினை, தாராள மனப்பான்மையினை வெளிப்படுத்த உதவும் சந்தர்ப்பங்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். சிறிய விடயங்களிலும் பெரிய மனதோடு, பொறுப்புணர்வோடு செயற்படுங்கள். தண்டனை கொடுக்க அவசரப்படாதீர்கள். ஆத்திரப்பட்டு அமைதியைக் குழப்பாதீர்கள்.

இல்லாமையை இல்லாமற் செய்வது நல்லதுதான். அதற்காகப் பொல்லாதவர்களாக மாறிவிடாதீர்கள். நல்லவை செய்வதில் வல்லவர்களாகத் திகழ நல்வாழ்த்துக்கள்.

''பாதுகாவலன்'' 23 – 1 – 1987 அன்பு அண்ணு, வி. பி.



# மாற்றமும் மாட்சிமையும்

''குருவே நான் யாருக்காவது குற்றம்செய்து மற்றவர்களுடைய பொருள்களை அபகரித்திருந்தால ஒன்றிற்கு நாலு மடங்காகக் கொடுத்துவிடுகின்றேன்'' - லூா. 9/8.

கிறிஸ்துவை சந்தித்த சக்கேயு மனம்மாறியபின் புதியதொரு வாழ்க்கையை ஆரம்பிக்கின்றான்; மனிதர்களோடு நேரிய உறவாடலை மேற்கொள்கின்றான்; இறைவனோடும் மனிதரோடும் இணைந்தநிலையில் தனது பாவங்களுக்கு ஈடுசெய்த நிலையில், தனது வாழ்வில் ஏற்பட்ட திருப்பத்தை, நல்வாழ்வை மேற்கொள்ளும் விருப்பத்தை வெளிப்படுத்துகின்றான்.

அன்புத் தம்பி, தங்கையர்களே,

உங்களையும் என்னையும் இறைவன் பல்வேறு சந்தர்ப்பங்களிற் பல்வேறு ஆள்களினூடாகச் சந்தித்துக் கொண்டேயிருக்கின்றார். ஆனால், நாமோ அவரது சந்திப்பைப்பற்றிச் சிறிதும் சிந்தியாது, எதுவித மாற்றமுமின்றிப் பாவத்திலே தோற்றமளிக்கின்றோம்; மாற்றமில்லாமலேயே மாட்சிமைபெற முனைகின்றோம்.

எனவே, இதயம் நுழைந்து உயிர்கலந்த இறைவனை ஏற்று, எதையும் தாங்கும் இதயத்தோடு, பாவப் பழியினைப் போக்க, பாரினை மாற்ற முதலில் எம்மையே மாற்றிடுவோம்.

''பாதுகாவலன்'' 30 – 1 - 1987 அன்பு அண்ணு வி. பி,

# அர்ப்பணமாகுங்கள்!

“அவரே இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுவித்துத் தம் அன்பார்ந்த மகனுடைய அரசில் கொண்டுவந்து சேர்த்தார்”. கொலோ. 1/13

அன்புத் தம்பி, தங்கையர்களே வணக்கம், நல்வாழ்த்துக்கள்.

இறைமகன் கிறிஸ்துவின் இராச்சியம் உலகுசார் மதிப்பீடுகளை, மனித அளவீடுகளைக் கடந்தது என்பதை இன்று உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். மற்றவர்களை தளர்ச்சியுறச் செய்வதன்மூலம் வளர்ச்சியடைய முயலும் மனிதர்களைப் போலல்லாது தன்னையே சிலுவையில் அர்ப்பணித்ததன் மூலம் அழிவில்லா வாழ்க்கையை அனைவர்க்கும் அருளுகின்ற அரசு அவருடையது.

இறைவனாயிருந்த கிறிஸ்து தன்னை மனிதனாய்த் தாழ்த்திக் கொண்டதன்மூலம், சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்டதன்மூலம் அகிலம் அனைத்தையும் விடுதலைபெற்ற நிலைக்கு உயர்த்தினார். அழிவு நிலையிலிருந்து உயர் வாழ்வு பெற்ற நிலைக்கு, அன்பு, அருள், ஆனந்தம், நீதி நிறைந்த சாம்ராச்சியத்தினைத் தன்வயமாக்கும் உரிமைப்பேற்றினை அனுபவிப்பதற்குக் கிறிஸ்து எல்லோருக்கும் எல்லாமாகத் தன்னையே அளிக்கின்றார்.

இறைவன் உங்களை ஆட்கொள்வாராக.

“பாதுகாவலன்” 6 – 2 – 1987 அன்பு அண்ணா வி. பி.



# இறை இல்லங்கள்

‘உங்கள் உடைகளை அல்ல,
உங்கள் இதயங்களைக் கிழித்துக் கொள்ளுங்கள்.
(யோவேல் 12:13)

அன்புத் தம்பி, தங்கையர்களே,

இறைவனைப் பிரிந்த நிலையில், இறையுறவை மறந்த நிலையில் வாழுகின்ற மனிதர்களை மீளவும் இறைவனோடும் மனிதரோடும் இணைக்கும் ஒரு காலமாகத் தவக்காலம் விளங்குகின்றது. இறைவன் இருக்கின்றாரா? என்று கேள்வி கேட்கப்படும் இந் நாள்களிலே இறைவனின் இருத்தலையும், இறைவனின் விடுதலைப் பிரசன்னத்தையும், அவரது தொடர்ச்சியான பராமரிப்பையும் உணர்ந்தவர்களாய் விசுவாசிகளாய் வாழ வேண்டும் என்பதை நினைவூட்டி நிற்கின்றது இக் காலம். எனவே, இளைஞர்களே, உங்கள் உள்ளங்களை எக் காரணம் கொண்டும் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள். இறைவனின் குரல் ஒலியைக் கேளுங்கள். உங்கள் உள்ளங்கள் என்றும் இறைவனின் இல்லங்களாக அமைய எனது நல்வாழ்த்துக்கள்.

“பாதுகாவலன்” 20-3-1987 அன்பு அண்ணா, வி. பி.

# 2—ம் தரத்தினர் அல்ல

"நானே உலகின் ஒளி;
என்னைப் பின்செல்பவன் இருளில் நடவான்
உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான்" (அரு 8:12)

அன்புத் தம்பி, தங்கையர்களே,

இருட்டினில் வாழும் பலவகையான மனிதர்களை நாளும் சந்தித்து வருகின்றீர்கள். இவர்களுக்கு எல்லாமே இருளாகத் தோன்றுகின்றன. குறிப்பாக, இளைஞர்கள் என்றாலே இவர்களுக்குப் பிடிக்காது. "இந்தக் காலத்துப் பிள்ளைகள் ஒரு செப்புச் சல்லிக்கும் மதிப்பில்லாதவர்கள்" என்று சதா சலித்துக்கொள்வார்கள். எனினும் அறியாமை, அன்பின்மை, தலைக்கனம், தாழ்வுச்சிக்கல் போன்ற பல்வகை இருளினில் மூழ்கியிருக்கும் மனிதர்கள் உயிரின் ஒளியைக்கொண்டு வாழக் கிறிஸ்து வாழ்வின் ஒளியாக மாறுகின்றார்.

எனவே, கிறிஸ்துவினால் ஒளிர்விக்கப்படும் உண்மைக் கிறிஸ்தவர்கள் நீங்கள் என்பதை ஏற்று, ஒளியின் மக்களாக வாழ முற்படுங்கள். நீங்கள் எந்தவகையிலும் இரண்டாந் தரப் பிரசைகள் அல்லர், இறைவனின் சுவீகாரப் பிள்ளைகள்.

வணக்கம், நன்றி

"பாதுகாவலன்" 27-3-1987 அன்பு அண்ணா, வி. பி.



# கருணை மழை

அன்புத் தம்பி, தங்கையர்களே,
"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் இணையடிக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"

— என்கின்றார் சுவாமி விபுலானந்தர்

தூய உள்ளத்தைத் தினம் தேடிவரும் இறைவன்
தியாக நெஞ்சங்களின் தாகம் தீர்க்கும் துணைவன்
துயர் தீர்க்க கூவுகின்றான் பரமன் குரல் கேளீரே.

பாதிவழி சென்ற பின்னர் மோதிவிடும் வாழ்வலைகள்
மீதிவழி சென்றிடாமல் திருப்பிவிடும் எதிர்வினைகள்
பாசத்திற்குப் போம்பேசி மோசம்செய்யும் தொடர் வினைகள்
பாரினிலே பறந்துபிறக்க பரமன் குரல் கேளீரே.

உள்ளம் மகிழ்ந்திடவே, உண்மை உரைத்திடவே
கள்ளம், கபடமின்றி, கடமையினைப் புரிந்திடவே
கண்ணை இமை காப்பதுபோல் காத்திடுவான் அவன்
கருணைமழை பொழிகின்றான் பரமன் குரல் கேளீரே.

"பாதுகாவலன்" 3-4-1987 அன்பு அண்ணா, வி. பி.

# விடுதலை வாழ்வு

"கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால் எங்கள் தூதுரை பொருளற்றதே. உங்கள் விசுவாசமும் பொருளற்றதே."

1 கொரி 15 :13 – 14.

அன்புத் தம்பி, தங்கையர்களே,

பொய்மையினின்று மெய்மைக்கும் இருளினின்று ஒளிக்கும் சாவினின்று வாழ்விற்கும் மனித சமுதாயத்தைக் கடத்திச் செல்வதாகக் கிறிஸ்துவின் உயிர்ப்பு நிகழ்ச்சி அமைகின்றது. கிறிஸ்தவ வாழ்வின், கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை கிறிஸ்துவின் உயிர்ப்பே. இதன் மூலம் ஒவ்வொரு தனிமனிதனும் உள்ளார்ந்த ரீதியாகவும், சமூக ரீதியாகவும் விடுதலையை எய்துகின்றான். பாவத்தின் அடிமைத்தளைத்திலே சிக்குப்பட்டு, அநீதங்களின் கருவியாகச் செயற்பட்டு வந்த மனிதன் மாண்பு மிகு மனிதனாக மாற்றப்படுகின்றான்.

எனவே, நீங்களும் கிறிஸ்து இயேசுவின் புதுப்படைப்புகளாக உருமாற்றம் பெற்று, ஏற்றமிகு சிந்தனையில் நாளும் வளர எனது நல்வாழ்த்துக்கள்.

"பாதுகாவலன்" 1-5-1987 அன்பு அண்ணா வி. பி.



# விழித்தெழுங்கள்!

"தூங்குபவனே எழுந்திரு; இறந்தோரினின்று எழுந்து நில்; கிறிஸ்து உன்மேல் உயிர்த்தெழுவார்." — எபே 5/14

அன்புத் தம்பி, தங்கையர்களே,

அல்லும் பகலும் தூங்கிவிட்டு அதிர்ஷ்டம் இல்லை என்று அலட்டிக் கொள்வது மோசமானது. அழுமூஞ்சிகளாய், துடிதுடிப்பின்றி, ஏனோ தானோ நிலையில் வாழ்வது விரும்பத்தகாதது. உற்சாகமின்றி, வாழ்க்கையிற் பிடிப்பின்றி உயிர் பிழைத்துக் கொண்டிருப்பது மனித வாழ்க்கைக்கு விரோதமானது.

உற்சாகத்தோடு உயிர்த்தெழுந்த ஆண்டவருக்குச் சான்று பகர்ந்து வாழுங்கள். உண்மையே பேசுங்கள். நன்மையே செய்யுங்கள். இறைவனையே நம்பி இனிதே வாழுங்கள்.

நல்வாழ்த்துக்களுடன்

"பாதுகாவலன்" 8-5-1987 அன்பு அண்ணா வி. பி.

# அந்தரிக்கும் ஆன்மாக்கள்

அன்பு இளம் போராளிகளுக்கு,

நீங்கள் மார்க்ஸியவாதிகள், மதத்தை மதிக்காதவர்கள், இறைவனைப் பிரிந்த நிலையில் மனிதனுக்கு, முக்கியத்துவம் கொடுத்து வாழ்பவர்கள் என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால், நான் சொல்வேன்.

உங்களது கடந்தகால இறை விசுவாச அனுபவத்திலிருந்து, உங்களது பெற்றோரின் உறுதியான வழி நடத்துதல்களிலிருந்து பெற்றுக் கொண்ட இறையுணர்வை நீங்கள் எந்த வகையிலும் மறந்தவர்கள் அல்லர். நீங்கள் வார்த்தையால் அல்ல வாழ்க்கையால் இறை இருத்தலை வெளிக்காட்டி வருகிறீர்கள். அந்த வகையில், உங்களது போராட்டம் வீண் போகாது.



29–4–87 இல் P. P. பிலிப் அடிகளாரின் வெள்ளிவிழாப் பூசையில், சுவாமி ஜெயசீலன் கூறினார்:

''குருக்கள் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையிற் கிறிஸ்துவின் சிலுவையிலே தொங்கிக் கொண்டு நிற்பவர்கள், மண்ணையும் தொடாது, விண்ணிற்கும் போகாது இடை நடுவே நின்று அந்தரித்துக் கொண்டிருக்கும் மனிதர்கள்.''

'இயேசுவே, நீர் அரசுரிமையோடு வரும்போது, என்னை நினைவு கூரும்' (லூக். 23:42) என்று கூறிய நல்ல கள்வனைப் போன்று இறைவனின் இரக்கத்தை வேண்டி நிற்பவர்கள்.

இன்றைய சூழலில், குருக்கள் மட்டுமல்லர் எமது போராளிகளாகிய நீங்களும் இந்த உலகின் இடைநடுவே நீதிநிறை கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாகத் தொங்கப்படுபவர்கள் தாம். தாயகம் மீட்கத் தரணியிலே, உயிர் என்றும் பாராது போராட்டத்தை மேற்கொண்டு வருகிறீர்கள். பெற்றோரைப் பிரிந்து, காதலைத் துறந்து, குடும்ப வாழ்க்கையைத் துறந்து, கண்ணீரும் இரத்தமும் சிந்த, உயிரையும், உறவையும், பணயம் வைத்துக் களத்திலே இறங்கிவிட்டீர்கள்.

நிச்சயமாக நீங்கள் வாழத்தான் போகிறீர்கள். உங்களது இலட்சியப் போராட்டத்திலே வெல்லத்தான் போகிறீர்கள்.

உயிர்கள் அழியலாம், உடைமைகள் அழியலாம். ஆனால் நியாயமான உரிமைகளை நிலைப்படுத்துகின்ற இலட்சியங்கள் என்றும் அழிவதில்லை.

இருட்டினில் வேடங்கள் வேண்டாம்
இறைபலமே மனித நலம் ஆகட்டும்.
நல்வாழ்த்துக்கள்.

''பாதுகாவலன்'' 15-5-1987 அன்பு நெஞ்சன் வி. பி,

# இவர்களும் மனிதர்களா?

அன்பு, இளம் உள்ளங்களுக்கு,

இன்று எமது மக்களிற் பலர் உறவினரை இழந்து, உடைமையை இழந்து, வீடுகளை இழந்து, காணிகளை இழந்து, அனைத்தையும் இழந்து, அகதிகளாய்த் தஞ்சம் கோரி வருகின்றார்கள். அதேவேளை, அளவுக்கதிகமான காணிகள், வீடுகள், பணம் ஆகியவற்றை முடக்கி வைத்துக் கொண்டு, எம்மவரிற் பலர் கன்மூடித்தனமாய் வாழ்வதைக் கண்டு, 'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்' என்று நீங்கள் பொங்கி எழுவதை நினைத்து நான் ஆச்சரியப்படுவதற்கில்லை.

'இவர்களையும் அகதிகளாக்குவோம்' என்று துடிதுடிப்போடு நீங்கள் எழுதியதை வாசித்து நான் மெய்சிலிர்த்துப் போனேன். இவர்களும் தமிழர்களா? இவர்களும் மனிதர்களா? என்று நீங்கள் கேள்வி கேட்பது ஒரு வகையில் நியாயம்தான். எனினும் அவசரப்படாதீர்கள். அவர்களும் மனம் மாறி, மனிதர்களாக வாழுவதற்குச் சிறிது அவகாசம் கொடுங்கள்.

''பாதுகாவலன்'' 22-5-1987 அன்பு நெஞ்சன் வி. பி.



# தொடர்புகளின் தொடர்கதை

அன்பு, இளம் உள்ளங்களுக்கு,

''சந்திப்பு வருவதுகண்டு;
பலர் சந்திக்கும் இடங்களும் உண்டு.
சொந்தங்கள் ஆவதுமுண்டு; சில
தொடர்கதை யாவதுமுண்டு.''

— ஒரு கவிஞன் குரல்

உள்ளங்கள் பலவகை; உறவுகள் பலவகை. அவற்றில் இஃது ஒரு வகை. முன்பின் தெரியாத இரு உள்ளங்கள் எதிர்பாராது சந்திக்கின்றன. சங்கமமாகின்றன. சொந்தம்

கள் ஆகிவிட்ட, தொடர் கதையாகி விட்ட இந்த மனித உறவு வெறும் சட நிகழ்வு அன்று. மனிதனும் மனிதனும் சந்திக்கின்ற இந்த உறவு, அவனை அவனாகவும், அவளை அவளாகவும் ஏற்றுக்கொள்கின்ற உறவு, உள்ளத்து ஊசலிலே உதயமாகிய உறவு இறைவனும் மனிதனும் இணைந்த நிலையில் வாழ்வாற்றில் ஏற்படுத்தி வருகின்ற உன்னதமான உறவின் வெளிப்பாடாகவே அமைகின்றது.

இந்த உறவிலே ஆளே ஆளை அவமதிக்கின்ற சம்பவங்கள் இல்லை, சஞ்சலமான எண்ணங்களோ சந்தேகம் சஞ்சரிக்கின்ற கற்பனைகளோ இல்லை. அங்கு ஆத்மாவின் இராகங்கள், இறைவனின் இதய கீதங்கள் ஒலிக்கும்.

மனித வாழ்வினைத் துறப்பது எவரினதும் இலட்சியமாக இருக்கக் கூடாது. ஏனெனில், அஃது இரட்சணியம் அல்லாத செயற்பாடு. ஆனால், மனித வாழ்வினில் துறப்பதற்குப் பல உள. அங்கேதான் இரட்சணியம் உண்டு. அவற்றிற் சில வற்றை இங்கே கூறுகிறேன்:

தப்பான சிந்தனைகள்
தவறான சிநேகிதங்கள்
போலி மதிப்பீடுகள்
போலிக் கௌரவங்கள்
அதிகாரத் துர்ப்பிரயோகங்கள்
அகந்தையான செயற்பாடுகள்.

உள்ளங்கள் மகிழ, உறவுகள் மலர
இறையவன் துணையோடு இகமதில் வாழ்ந்திட
நல்வாழ்த்துக்கள்.

''பாதுகாவலன்'' 29-5-1987 அன்பு நெஞ்சன் வி. பி.



# வைத்தியமும் பத்தியமும்

அன்பு இளம் உள்ளங்களுக்கு,

இம்முறை கலைவாணர் கூறிய கதை ஒன்றினை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

நோயுற்ற ஒருவன் ஒரு வைத்தியரிடம் போய், 'ஐயா! எனக்கு இன்ன நோய். அதற்கு ஏதாவது வைத்தியம் செய்யுங்கள்' என்று கேட்டான்.

அந்தச் சித்த மருத்துவன் ஒரு லேகியத்தை எடுத்துக் கொடுத்தான்.

'சரியுங்க ஐயா! இந்த லேகியத்தைச் சாப்பிடும்போது ஏதாவது பத்தியம் உண்டா?' என்று அந்த நோயாளி கேட்டான்.

'பத்தியம் லேசானதுதான்; லேகியத்தைச் சாப்பிடும் போது குரங்கை நினைத்துக் கொள்ளக் கூடாது' என்று மருத்துவன் சொன்னான்.

நடந்தது அவ்வளவுதான். பிறகு அவன் எப்போது லேகியத்தை எடுத்தாலும் எதிரே குரங்கு வந்து நிற்பதுபோல் தோன்றும். கடைசி வரையில் அந்த லேகியத்தை அவனால் சாப்பிட முடியவில்லை. லேகியத்தைத் தொடும்போதெல்லாம் குரங்கு, குரங்கு என்ற எண்ணமே அவன் மனதில் தோன்றியது.

இதற்கு நானும் நீங்களும் விதிவிலக்கில்லை, என்றுதான் கூறவேண்டும். எதைச் செய்யக் கூடாதோ அதனைச் செய்ய வேண்டும் என்பதும் எதை நினைக்கக்கூடாதோ அதனையே மீண்டும் மீண்டும் நினைப்பதும் எமது பொது அனுபவமே. எனினும், எமது மனதை நெறிப்படுத்துவதன் மூலம் நற்சிந்தனைகளை மனத்தில் தூவுவதன்மூலம் எமது வாழ்விலே நிறைவு எய்தலாம்.

போன கடிதத்தில் நீங்கள் செய்யக் கூடாதனவற்றிற் சிலவற்றைக் கூறித் தொந்தரவு படுத்திவிட்டேன் என்று நினைக்கிறேன். எனவே, நீங்கள் செய்யவேண்டியவற்றிற் சிலவற்றைக் கூறி விடைபெறுகின்றேன்.

- நல்லதையே செய்யுங்கள், நல்லதையே சொல்லுங்கள், நல்லதையே கேளுங்கள்.
- உத்தமராய் வாழுங்கள், உண்மையே பேசுங்கள், உயர்ந்தோராய் மகிழுங்கள்.

''பாதுகாவலன்'' 19-6-1987 அன்பு நெஞ்சன் வி. பி.



# வெளிவேடத்தனம் வேண்டாம்

அன்பு இளம் உள்ளங்களுக்கு,

சக்கரவர்த்தி முருகேசன் என்பவர் ''நம்வாழ்வு'' (13-10-85) மூலம் கடவுளுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

'ஓ' ஆண்டவனே!
உனக்கு லஞ்சம் கொடுத்து
கைவசப்படுத்தப்பார்க்கிறார்கள்.
உனக்குத் தங்கத்தால்
உருவம் செய்து
தாலி வார்த்துக் கொடுப்பார்கள்.
பொன்னால் செருப்புச் செய்து
காலுக்கு மாட்டுவார்கள்.
வெள்ளியால் கிரீடம் செய்து
சிரசிலே சூட்டுவார்கள்.
வைரத்தால் ஆடை செய்து
மார்பிலே தவழ விடுவார்கள்.
இவர்களிடம்
ஏமாந்து எங்களை

மறந்து விடாதேயும்.
இப்படிக்கு உமக்கு ஒன்றுமே
தர முடியாத ஏழைகள்

மனிதர்களிற் சிலர் மனிதர்களை ஏமாற்றுவது போல இறைவனையும் ஏமாற்ற முற்படுகின்றார்கள். பக்தர்கள் என்ற போர்வையில் பித்தர்களாக விளங்கும் இவர்கள் ஏனையோரது நியாயமான தேவைகள் நிறைவு செய்யப்படாதவாறு தடைக்கற்களாய்ச் செயற்படுகின்றார்கள். மனித காருண்யம் மரத்துப்போன நிலையில் மாயஜாலங்கள் போடுகிறார்கள்.

அண்மையிற் கொழும்பில் 15000 கத்தோலிக்கர்கள் கண்டனம் தெரிவித்து ஊர்வலம் நடாத்தினார்கள். காரணம் அன்றாடம் குண்டுகள் போடப்பட்டு நடைப்பிணங்களாக மாற்றப்பட்ட யாழ் மக்கள் பட்டினியால் இறந்து போகாதிருக்க உணவுப் பொட்டலங்களைப் போட்ட இந்தியாவின் மனிதாபிமானச் செயலை மட்டம் தட்டுவதற்காகவே.

எகிப்தியரின் அடிமைத் தனத்திலிருந்து மீட்டெடுக்கையில் இஸ்ராயேலரின் விடுதலைப் பயணத்தின் பொழுது இறைவனால் மன்னா வானத்திலிருந்து பொழியப்பட்டது. ஆனால், இன்று அனைத்தையும் இழந்து அனாதைகளாய் விடப்பட்ட எமது விடுதலைப் பயணத்தின் போது இந்தியாவினால் உணவு விமானத்திலிருந்து பொழியப்பட்டது. இதுவும் ஒருவகையில் இறைச் செயற்பாடுதான் என்பதை அந்தக் கத்தோலிக்கர்கள் கண்டுணரத் தவறிவிட்டார்கள். இந்த இரக்கமில்லாத அரக்கக் குணம் படைத்தோரின் வெளிவேடத்தனம் உடைக்கப்பட வேண்டும்.

வேதனை வேள்வியிலும் சாதனையை நிலைநாட்ட
ஏற்றமிகு வாழ்வினை வெளிக்காட்ட
எழுந்திடுவீர் இளைஞர்களே.

''பாதுகாவலன்'' 3-7-1987 அன்பு நெஞ்சன் வி. பி.



# ஆடை கழற்றுதல்

அன்பு உள்ளங்களுக்கு,

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு மாதிரி. ஒருவனுடைய நடை, உடை, பாவனைகள், பழக்கவழக்கங்கள் அவனுடைய ஆளுமையை வெளிப்படுத்துகின்றன. அவன் பேசுகின்ற பாவனையிலிருந்தும் அவனோடு பழகுகின்ற நண்பர்களிலிருந்தும் அவன் வாழுகின்ற குடும்பச் சூழலிலிருந்தும் அவனது ஆளுமையின் ரகத்தை இனம் காணலாம்.

ஆடை கழற்றுவதிற் காணப்படும் ஆழ்மன வெளிப்பாட்டை டாக்டர் பராங் கேப்ரியே பின்வருமாறு கூறுகின்றார்.

நிதானமாகவும் கவனமாகவும் ஆடைகளைக் கழற்றுபவர் மிக்க தன்னம்பிக்கையுள்ளவர், மதிநுட்பம் வாய்ந்தவர்.

வெளியிலிருந்து வந்ததும் உடனே ஆடைகளைக் கழற்றுபவரா நீங்கள்? அப்படியென்றால் நீங்கள் மற்றவரது கருத்துக்கு மதிப்பளிப்பவர்.

ஒரே வழக்கமாக இன்றி, அவ்வப்போது மனத்திற்கேற்றபடி உடைகளைக் கழற்றும் பழக்கமுடையவரா நீங்கள்? அப்படியானால் நீங்கள் அசாதாரணமான ஆள், சுவாரஸ்ய மிக்கவர்.

உடைகளை ஒவ்வொன்றாகக் கழற்றி அந்தந்த இடத்தில் வைக்கும் பழக்கமுடையவராக இருந்தால், குற்றம் காணவும் முடியாதவர்களாய் இருப்பீர்கள். எதிலும் சிரத்தையாக இருப்பீர்கள்.

ஆடைகளைக் கழற்றி மூலைக்கொன்றாக எறிபவராக நீங்கள் இருந்தால் எவரைப்பற்றியும் கவலைப்படாதவர். ஆனால், பழகுவதற்கு இனிமையானவர்.

இளைஞர்களே, இவர்களில் நீங்கள் எந்தவகை என்பதைக் கூறுங்கள்.

''பாதுகாவலன்'' 10.7-1987 அன்பு நெஞ்சன், வி. பி.

# தியாகிகளின் வேஷமா?

அன்பு இளம் உள்ளங்களே,

பேச்சோ பல்லக்கு! தம்பி கால்நடை!
வஞ்சமற்ற மனிதர்களின் தீவினைகள்
நெஞ்சம் கல்லானோரின் சொல்லம்புகள்
கஞ்சி தராவிடினும் குந்தியிருக்கக்
கொஞ்சம் இடமாவது தாருங்களேன் எனக்
கெஞ்சும் மனிதக் குரல்களை ......
தேவை எங்கேயோ சேவை அங்கே என்பார்.
அயலவனை அன்பு செய்யுங்கள். அகதிகளை ஆதரியுங்கள்.
அல்லற்படுவோருக்கு ஆறுதல் அளியுங்கள்.
ஆடையற்றோரை அணிவியுங்கள் என்பார்.

போதனையிலோ *100* புள்ளிகள். சாதனையிலோ பூச்சியம்.

கட்டடங்களைக் கட்டிக் காக்கக்
காவல் போடும் மனிதர்களே
மனிதர் மாத்தறப்போன நிலையிற்
புனிதம் பேசும் கருமிகளே
உயிர்ப்பிச்சை கேட்டோரைத்
தெருப்பிச்சை எடுக்க
வெறிகொண்ட நாய்கள்போல்
நெறிகெட்டுத் துரத்துவதுதான்
தமிழர்களின் தியாகமா?
தியாகிகளின் வேஷமா?
தலையால் அன்று. காலால் நடவுங்கள்.
அதர்மங்களை அழிக்க அதிகாரத்திமிர் களையக்
குரல் கொடுக்க வாருங்கள்.

"பாதுகாவலன்" **17-7-1987** அன்பு நெஞ்சன் வி. பி.



# யாருக்கு தானம்?

அன்பு இளம் உள்ளங்களுக்கு,

**அ**ண்மையில் ஒரு கிராமத்திற் கோவில் திருவிழா நிகழ்ந்தது. இந்தச் சூழலிலும் திருவிழாவா என்று கேட்டவர்களில் ஒரு சிலரும் கூட அங்கு சென்றிருக்கிறார்கள். ஆண்டுக்கு ஒருமுறை வந்து, தாங்கள் தாம் பக்திமான்கள் என்று காட்சிப் பொருள்களாகக் கூட்டைச் சுற்றி வழமையான கூட்டம் நின்றுகொண்டிருந்தது. ஆனால், இம்முறை அந்நிகழ்ச்சியிற் சின்ன ஒரு வித்தியாசம். வழமையாக அங்கு கொடுபடவிருந்த அன்னதானம் இளைஞர்கள் சிலரின் முயற்சியால், அருகிலுள்ள அகதிமுகாமிற்கு மதிய விருந்தாக அளிக்கப்பட்டது. ஆதரவற்ற அந்த உள்ளங்களுக்கோ பெரும் மகிழ்ச்சி, ஆனால் பாரம்பரியப் பக்திமான்களுக்கோ பெரும் ஏமாற்றம்.

இளசுகளின் நற்செயல்களைப் புரிந்து கொள்ளாது, பழசுகள் தொடர்ந்து பழைய பல்லவியைப் பாடிக் கொண்டிருக்கிறார்கள். வரட்டுக் கௌரவம், அதிகாரத் திமிர் கொண்டு அவர்கள் மனிதப் பிரச்சனைகளை, மனித உணர்வுகளைப் புரியாது, மக்களை மக்களாக மதிக்காது, நொந்து போன உள்ளங்களை மேலும் வெந்து போகச் செய்கிறார்கள். நரம்பில்லா நாக்கால் வரம்பில்லாமற் பேசி, சிரச்சேதம் செய்வதற்குப் பதிலாக உளச்சேதம் செய்து வருகின்றார்கள். தமது சொந்தப் பெயரையும், புகழையும் நிலைநாட்ட முழுமையான சுயநல வாதிகளாகச் செயற்பட்டுவரும் இவர்கள், சமுதாயமறுமலர்ச்சியை முரணுக்கும் முட்டுக் கட்டைகளாய்க் காணப்படுகின்றார்கள். இவர்களை இனம் கண்டு பிற்போக்குத் தன்மையினை முறியடிக்க முற்போக்கு இளம் சிந்தனைகள் ஒன்று சேரட்டும்.

**பாதையைப் பார்த்து பயணத்தைத் தொடருங்கள்;**
**வானத்தைப் பார்த்து வழி தவறாதீர்கள்!!**

நல்வாழ்த்துக்களுடன்

"பாதுகாவலன்" **24-7-1987** அன்பு நெஞ்சன் வி. பி.

# இலட்சமே இலச்சியமா?

அன்பு இளம் உள்ளங்களுக்கு,

பொய்மைக்கு உரமாகி பகைமையின் கரமாகி
பாசத்திற்குக் கரவு கூறும் நீசமான நினைவலைகள்.

நினைவெல்லாம் நீயேயானால் உனை மறந்து
கணமேவாழேன்
இணையில்லா அணங்கே கேளாய்
உனைப்பிரிந்து கணமேவாழேன்
என்றுதினம் கூறியவன்
இன்றுமணந்தது 5 இலட்சம்.

தாய்க்கேற்ற சேயாகி தனையிழந்த பேயாகி
திருமணச் சந்தையிலே திருமண நகலானான்.

நித்தியமும் சத்தியமே இத்தரையில் துணைநிற்க
சீதனம் என்கின்ற சீரழிவுச்சாதனம்
ஆசனம் இழந்திடத் திரமுடன் திகழுங்கள்.

நல்வாழ்த்துக்களுடன்

**''பாதுகாவலன்'' 31-7-1987 அன்பு நெஞ்சன், வி. பி.**



# அம்மணம்

அன்பு இளம் உள்ளங்களுக்கு,

செம்பியன் செல்வனின் 'குறுங்கதை நூறு, நூலிலிருந்து ஒன்று இதோ, தங்கள் தங்கள் பொம்மைகளை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தனர் சிறுமிகள், திடீரென்று இருவரிடமும் ஒரு போட்டி மனப்பான்மை தோன்றிவிட்டது.

''என்ர பொம்மைதான் வடிவு''

''இல்ல என்ர பொம்மைதான்...''

''ஐய.... உன்ர பொம்மைக்குக் காலில்லை...''

''உன்ர பொம்மை ஒரே கறுப்பு... ஊத்தை... உவ்வே...'' ''ஐய... என்ர பொம்மை கண்ணை மூடித் திறக்கும்'' ''ஆறு... சட்டையே போடல்லே... வெட்கம்'' என்று ஒரு குழந்தை சொல்ல, மற்றது அழத் தொடங்கியது. அழுகுரல் கேட்டு இருவரின் தாய்மாரும் ஓடிவந்தனர்.

''ஏய்... ரெண்டும் இங்க வாங்க, குளிச்ச கையோட சட்டை கூடப் போடாம... அம்மணமாக... விளையாட தெருவுக்கு வந்து சண்டையா போடுகிறீர்கள்?''

இரண்டும் குடுகுடுவென்று தாய்மாரிடம் ஓடின.

ஆனால், நீதி, நியாயம், தியாகம் அன்பு, மனித மாண்பு அனைத்தையும் துறந்து நிர்வாணமாக நிற்கும் ஒரு சில 'பெரியார்களுக்கு, முன்னிருக்கை விரும்பிகளுக்கு, தங்களது உண்மையான நிலைமையை நினைத்து இன்னும் வெட்கம் வரவில்லை. நெஞ்சிலே ஈரமில்லாமல், இவர்கள் தாங்கள் தப்பிவிட்டோம், தங்களது வீட்டிற் செல் விழவில்லை, தங்களது பிள்ளைகள் தான் பூசாவிற்குப் போகாத அதிஷ்டசாலிகள்'' என்று சொல்லிக் கொள்வதிலே பெருமிதம் அடைகிறார்கள். இவர்களது சின்னத்தனத்தை என்னென்று வர்ணிப்பது?

எனவே, நன்மை செய்வதையே நோக்காகக் கொண்ட நல் இளம் செல்வங்களே, ஊனமுற்ற மனித மனங்களைக் குணப்படுத்த, ஊமையாகி விட்ட உண்மைகளைப் பேசச் செய்ய முன்வாருங்கள்.

நல்வாழ்த்துக்களுடன்,

''பாதுகாவலன்'' **7-8-1987** அன்பு நெஞ்சன் வி. பி.



# கொடுங்கள்

அன்பு இளம் உள்ளங்களுக்கு,

''நீ நிறைவு பெற விரும்பினால் உன் உடைமை களை விற்று ஏழைகளுக்குக் கொடு''

— மத். 10; 21

இன்று நம் எல்லோரையும் பிடித்திருக்கும் நோய் சுயநலம் எனும் பேய் ஆகும். அகில நோய்களுக்கும் அடிப் படையாகவும் மனித மகத்துவத்தினைக் குறைப்பதாகவும் இது காணப்படுகின்றது.

மனிதன் அரைகுறை மனிதனாகக் காணப்படுவதற்குக் காரணம் சுயநலப் பேய்க்கு அடிமையாயிருப்பதாகும்.

''செல்வத்தைப் புறக்கணிக்க வேண்டாம். வந்த விருந் தினரைத் தெய்வமாகக் கருது. உனக்காக மட்டும் உணவு உண்டாக்கினால் போதாது. நாட்டுக்குப் பயன்படுமாறு உணவை ஏராளமாக உண்டாக்கு. பொருள் உண்டாக்கு வது உனக்காக அன்று' மற்றவர்களுக்காக, எவருக்கும் இடமில்லை என்று சொல்லாதிருப்பாயாக.''

என்று உபநிடதம் கூறுகின்றது.

''இல்லை, இல்லை'' என்று இதயக் கதவுகளைப் பூட்டியது போதும், ஆலயமணியின் ஓசையை, ஆண்டவனின் அருள் மொழி ஒலியினை உங்கள் உள்ளங்கள் என்றும் கேட்கட்டும்.

நல்வாழ்த்துக்களுடன்

''பாதுகாவலன்'' **14-8-1987** அன்பு நெஞ்சன் வி. பி.

## மருத்துவக் குறிப்பு

அன்பு இளம் உள்ளங்களுக்கு,

இம்முறை, பல அன்பு நெஞ்சங்களுக்குத் தொல்லை தரும் பொதுவான நோய் – தடிமன் பற்றிக் கூற விரும்புகிறேன்.

'தும்முதல், கண் கலங்குதல், தொண்டை கரகரத்தல், மூக்கால் நீர் வடிதல் போன்றன தடிமனோடு தொடர்புடைய வெளிப்பாடுகளாகும். போசாக்கின்மை, மனச் சலிப்பு, சுகாதார வசதிகள் குறைந்த காற்றோட்டமில்லாத



அறையில் வசித்தல் போன்றன இவ் வியாதிக்குக் காரணமாக அமையலாம்.

டாக்டர் கவால்ற்னி (Dr. Gwaltncy), டாக்டர். கென்லி (Dr. Hendley) என்போரது மருத்துவ ஆராய்ச்சியின் படி, கையோடு கை சேருவதே தடிமன் பரவுதற்கு மிகவும் சாதகமாகவுள்ள ஊடகமாகும். இவர்களது கண்டுபிடிப்பின்படி, தடிமன் வைரசுகள் 1 மணித்தியாலம் கைக்குட்டையிலும் 2 மணித்தியாலங்கள் கைகளிலும் 72 மணித்தியாலங்கள் கடின மேற்றளங்களிலும் உயிர் பிழைத்துக் காணப்படும்.

தடை செய்யும் அல்லது பரவுவதைத் தடுக்கும் வழிகளிற் சில :

- ☐ அடிக்கடி சவர்க்காரம் போட்டுக் கழுவுதல்.
- ☐ மூக்கையோ, கண்களையோ கைகளால் தொடாமல் தவிர்த்துக் கொள்ளல்.
- ☐ போதுமான அளவு ஓய்வு எடுத்துக் கொள்ளல்.
- ☐ சமவலுப்படுத்தப்பட்ட சக்தியான சாப்பாட்டை உண்ணுதல்.
- ☐ கூடுதலான அளவு தண்ணீரைக் (சுடவைத்து ஆறியது) குடித்தல்.
- ☐ தொண்டை கரகரக்கிறது எனின் உப்புத்தண்ணீரால் கொப்புளித்தல்.'
- ☐ புகைத்தலைத் தடை செய்தல்.

நலமே வாழ நல்வாழ்த்துக்கள்

''பாதுகாவலன்'' 21-81957 அன்பு நெஞ்சன வி. பி.

# மாற்றமும் ஏற்றமும்

அன்பு இளம் உள்ளங்களுக்கு,

எமது வாழ்க்கையில் மாற்றம் வேண்டும் என நான் கூறும்போது ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறேன். மாற்றம் என்றதும் சிலருக்குப் பெரும் தாக்கம் ஏற்பட்டுவிடும் என்பது உண்மைதான். மாற்றம் என்றதும் சிலருக்கு முகம் நீண்டுவிடும். ''சும்மா இருந்தமாதிரி என்னை இருக்க விடுறுங்க இல்லையே! புதுசு புதுசா அதையும் இதையும் சொல்லி எம்மை குளப்புறுங்க'' என்று வேறு சிலர் எரிந்து விழுவார்கள்,

மாற்றம் இல்லா வாழ்க்கை ஏற்றமில்லா வாழ்க்கையாகும். வளமான வாழ்க்கையின் தோற்றம் மாற்றத்திலேயே மிளிரமுடியும். மாற்றமில்லா வாழ்க்கை நாற்றமிகு வாழ்க்கையென்றால் அது மிகையாகாது.

எனது நண்பன் ஒருவன் இடமாற்றம் வேண்டும் என்று நாலு ஆண்டுகளாகத் தனது மேலதிகாரிகளுக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தான்; கிடைக்கவில்லை. தான் இருக்கும் அறையையாவது மாற்றித் தரும்படி கேட்டான். அதுவும் கிடைக்கவில்லை. இப்பொழுது அவனில் பெரிய மாற்றம், முகம் மலரக் காணப்பட்டான். காரணம், தனது அறையிலுள்ளவற்றை (மேசை, கதிரை, கட்டில் ...) மாதாந்தம் மாற்றி வந்தான், ஓய்வு நேர ஈடுபாடுகளிலும் சில மாற்றங்களை மேற் கொண்டிருந்தான். இப்பொழுது அவனுக்கு அறையில் மட்டுமன்று, வாழ்க்கையிலும் பெரும் பிடிப்பு ஏற்பட்டு விட்டது.

எனவே, எந்த மாற்றத்திலும் ஏற்றமோ இறக்கமோ என்பது உங்கள் மனதைப் பொறுத்தது.

**காலுக்கு அளவாகச் செருப்பைத் தேடுங்கள்;**
**செருப்புக்கு அளவாகக் காலைக் குறைக்காதேயுங்கள்.**
நலமே வாழ நல்வாழ்த்துக்கள்

**''பாதுகாவலன்'' 28–8–1987 அன்பு நெஞ்சன் வி. பி.**



# உடைகின்ற உள்ளங்கள்

அன்பு இளம் உள்ளங்களுக்கு,

எமது வீடுகளில் அடிக்கடி நிகழும் சம்பவம். உங்களுடைய வாழ்விலும் இத்தகைய அனுபவம் ஏற்பட்டிருக்கலாம் என்று எண்ணுகின்றேன் ...

ஒரு சிறுபிள்ளை கண்ணாடித் தம்ளரைத் தவறுதலாகப் போட்டு உடைத்துவிட்டது. உடனே பிள்ளைக்கு உரமான அடி விழுந்தது. அடியின் தாக்கம் எத்தகையது என்றால் பிள்ளை தம்ளரைத் தூக்கும் ஒவ்வொரு தடவையும் அதற்கு நடுக்கம் ஏற்படும். தவறுதலாக உடைந்து போன தம்ளருக்காக ஏன் பிள்ளையின் மனதை முழுமையாக உடைக்க வேண்டும்? அடித்ததால் உடைந்து போன தம்ளர் மீள் உருவம் பெற்றிடுமா? அடித்தால்தான் பிள்ளை இனிமேற் கவனமாக இருக்கும் என்று தங்களது கோபத்தின் வெளிப்பாட்டிற்கு நொண்டிச்சாட்டு சொல்வார்கள்.

அந்தக் கண்ணாடித் தம்ளருக்கு வெள்ளிவிழாக் கொண்டாட முடியாமற் போய்விட்டதே என்ற கவலைதான் எம்மவரை இவ்வாறு செயற்பட வைத்து விட்டதோ என்று எண்ணவேண்டியுள்ளது. மேலைநாட்டவரின் பழக்கம், கிளாஸ் அல்லது பீங்கான் சிறிது வெடித்துவிட்டால் அதனை உடைத்து எறிவதேயாகும். ஒட்டி ஒட்டி வைப்பதன் மூலம் வெள்ளிவிழாக் கொண்டாடுவதிலே வெற்றிப் புன்னகை செய்யும் எம்மவரின் பழக்கம் எப்பொழுது எம்மை விட்டுப் போகுமோ?

**உடைந்துபோன தம்ளர்களை வாங்கி விடலாம் — ஆனால்**
**உடைந்துபோன உள்ளங்களை ஒட்டுவது எப்படி?**

**''பாதுகாவலன்'' 4-9-1987 அன்பு நெஞ்சன் வி. பி.**

# சுயசிந்தனை

அன்பு இளம் உள்ளங்களுக்கு,

"ஒருவன் குறித்த ஒரு பிரச்சனையில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதற்குப் பிறர் ஆலோசனையை மட்டுமே கூறமுடியும். ஆனால், எதைச் செய்ய வேண்டும் என்ற தீர்மானம் அவனது சித்தத்திலிருந்தே பெறப்படுகின்றது. நன்மை என்றால் என்ன என்பதை மனிதசித்தமே தீர்மானிக்கின்றது'' என்று கிர்க்கே கார்ட் கூறுகின்றார்.

இன்று, எமது சமூகத்திலே இழையோடிக் கொண்டிருக்கும் முக்கியமான பிரச்சனை எமக்காக ஏனையோர் முடிவு எடுப்பதாகும். பிள்ளைகள் வயதுவந்த பின்னரும், பிள்ளைகளின் வாழ்க்கைப் பிரச்சனைகளிற் பெற்றோரும் பெரியோரும் தாங்கள் தாம் முடிவு எடுக்க வேண்டும், தாங்கள் அதனை நிறைவேற்ற வேண்டும் என்று விடாப்பிடியாக இருப்பார்கள். தங்களது வாழ்வின் பெரும்பகுதி முடிவடைந்து விட்டது, இனி வாழ்பவர்கள், வாழ இருப்பவர்கள் தமது பிள்ளைகள் என்பதை மறந்தவர்களாய் அவர்களது விருப்பு, வெறுப்புக்களுக்குக் கிஞ்சித்தும் இடம் கொடாமல், தமது சித்தத்தையே நிறைவு செய்ய வேண்டும் என்று பலவந்தம் செய்வது அவர்களது காட்டுமிராண்டித்தனத்தையே காட்டுகின்றது.

எனவே, இளைஞர்களே, வயதுவந்து, சுயமாகச் சிந்திக்கும் பருவத்தை அடைந்த பின்னரும், பெற்றோருக்கும், பெரியோருக்கும் வால்பிடிக்க முற்படாதீர்கள்; பால் குடிப் பருவம் போய்விட்டது. உங்கள் கால்களே உங்களுக்குப் பலம், உங்கள் சிந்தனைகளிற் கலப்படம் வேண்டாம். தூய இலட்சிய நோக்கோடு, நியாயமான வாழ்க்கை நிலையினை அமைத்துக்கொள்ளும் ஆற்றல் உங்களிடமே உள்ளது.

A. J. குரோனின் கூறுவதுபோல, ''சாதனைகளிலெல்லாம் மேலான சாதனை, ஒருவன் தன்னைத்தானே வெற்றி கொள்வது. இவ்வெற்றியைத் தெரிந்து கொண்டவன் தோல்வியை அறிய வாய்ப்பேயில்லை.''

நல்வாழ்த்துக்களுடன்

''பாதுகாவலன்'' 11-9-1687 அன்பு நெஞ்சன் வி. பி.



# தியாகங்கள் திணிக்கப்பட வேண்டாம்

அன்பு இளம் உள்ளங்களுக்கு,

வசந்தகாலக் கோலங்கள் வானில் விழுந்த கோடுகளும் அல்ல; வறண்டகாலக் கீறல்களும் அல்ல. வாழ்க்கையில் வசந்தம் வேண்டும். ஏனெனில், அதனை வரவழைக்கும் ஆற்றல் உங்களிடமே உள்ளது.

உங்களது வாழ்வின் உயர்வு, வாழ்வின் வசீகரத்தில் கரங்களின் செயற்றிறனில், மனங்களின் ஒருங்கிசைவில், இதயங்களின் உணர்திறனில், தங்கியுள்ளது.

அதேவேளை, உங்களை ஏமாற்ற என்று, எத்தனையோ காரணிகள் காத்திருக்கின்றன. நாணயமில்லாத நண்பர்கள், காத்திரமில்லாத கருத்துக்கள், போலியான கொள்கைகள், தெளிவற்ற இலட்சியங்கள், மாற்றங்களை மாசாக்கக் கருதுகின்ற சமுதாய சமய அமைப்புக்கள் போன்றன, மகத்துவமான மனித வாழ்வினை நிர்மூலமாக்கும் அழிவுசார் கருவிகளாகத் தொழிற்படுகின்றன.

''தெளிவற்ற இலட்சியங்களுக்காக நிகழ்கால வாழ்வை மக்கள் தியாகம் செய்யவேண்டும் என வற்புறுத்துவது தவறாகும்.''

என நவீன மெய்யியலாளர் கார்ல் பொப்பர் கருத்துரைக்கின்றார். உங்களது சொந்த மகிமைக்காக, குடும்பப் பெயருக்காக, வீண்புகழுக்காக ஏனையோரைத் தியாகம் செய்யும்படி வற்புறுத்தாதீர்கள். வரட்டுக் கௌரவத்தினை நிலைநாட்டுவதற்காக, மனிதர்கள் பலிக்கடாக்களாக்கப்படுவது கொடியதாகும்.

''மனித வாழ்க்கை மகிழ்வானதாக மலர
மக்கள்மீது தியாகம் திணிக்கப்படாதிருக்கட்டும்.''

நல்வாழ்த்துக்களுடன்

''பாதுகாவலன்'' 18-8-1987 அன்பு நெஞ்சன் வி. பி.

# அரைகுறை மனிதர்கள்

அன்பு இளம் உள்ளங்களுக்கு,

**கி. பி.** இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிற் சீரிய தேசத் திருச்சபையில் எழுந்த 'என்கிரட்டிஸம்' (Encratism) எனும் தப்பான ஒரு கொள்கை படிப்படியாக முழுத் திருச்சபையிலும் பரவியது. இப்போதகத்தின்படி,

மனிதன் இடுப்புக்கு மேல் இறைவனின் சாயல் எனவும் இடுப்புக்குக் கீழ் சாத்தானின் சாயல் எனவும் கருதப்பட்டது. விளைவாக, திருமண வாழ்வு, தாம்பத்திய உறவு, மக்கட்பேறு முதலிய புனிதமான நிலைகள் யாவும் இழிவானவையாகக் கருதப்பட்டன. 'இல்லறம் இழிந்தது; துறவறமே உயர்ந்தது' என்ற தப்பபிப்பிராயம் வேரூன்றலாயிற்று. இன்றும், எமது மக்களிற் பெரும்பான்மையானோர் இத்தகைய தவறான கருத்துக்களிலிருந்து விடுபடவில்லை என்பதே வெளிப்படை. இன்னும், இவர்கள் மனித வாழ்க்கையை யதார்த்தமாக உற்றுநோக்கத் தவறிவிடுகிறார்கள்.

எனவே, இளைஞர்களே, பிழையான சிந்தனைகளுக்கு அடிமையாகாது, உள்ளதை உள்ளவாறே அனுபவிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் முழுமையாகவே இறைவனின் சாயல் என்பதை மறந்து விடாதீர்கள். அரைகுறை மனிதர்களாக நீங்கள் வாழவேண்டும் என எண்ணாதீர்கள். இறைவனின் உண்மை ஒளியில் உங்களையும் உங்களது பிரச்சனைகளையும் முன்வைத்து உன்னதமான மனித வாழ்க்கைத் தத்துவங்களை வெளிக்காட்ட முன்வாருங்கள்.

**போலியான வேலிகள் காலியாகட்டும்!**

''பாதுகாவலன்'' 25-6-1987 அன்பு நெஞ்சன் வி. பி.



# பகடைக் காய்கள்

அன்பு இளம் உள்ளங்களுக்கு,

இரைபோடும் மனிதர்க்கே இரையாகும் வெள்ளாட்டைப் போன்று இன்று மனிதர்கள் பலவிதமான ஆக்கிரமிப்புச் சக்திகளுக்கு உள்ளாக்கப்பட்டு அரசியல், சமய, சமூக அமைப்புக்களுக்கு இரையாக்கப்படுகின்றார்கள். இயந்திரமயமாக்கப்பட்ட சூழலிலே சுயமாகச் சிந்திக்கத் தெரியாது, சிந்தித்தவற்றைச் செயற்படுத்தாது வாழுகின்றவர்கள் அதிகரிக்கின்றார்கள். ஊனமுற்ற சமுதாயத்திலே, சூழல்களின் உருவங்களாகக் காட்சியளிக்கும் சிறுபான்மை அதிகார வர்க்கத்தினரின் கைப்பொம்மைகளாகப் பாமரமக்கள் காணப்படுகின்றார்கள்.

இவ்வாறு இன்று எமது சமுதாயம் சமநிலை இழந்து இருந்த முடியாத பழமை வாதத்திற்கு விருந்து படைக்கின்றது. இளைஞர்களே நீங்களும் இதற்கு ஒரு வகையில் உடந்தையாய் இருக்கின்றீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். சுதந்திரமான சிந்தனைகள் முடமாக்கப்பட்டுப் பகடைக் காய்களாய் நீங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதைப் பல்வேறு சந்தர்ப்பங்களிற் காணக்கூடியதாயிருக்கின்றது. நாளாந்தம் அதிகரித்து வரும் களவுகள், கற்பழிப்புக்கள், சுரண்டல்கள், சுமைப்படுத்துதல்கள், அநீதிகள், அக்கிரமங்கள் ஆகியன நீங்கள் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதையே எடுத்துக் காட்டுகின்றன. மரத்துப்போன மனித இதயங்களுக்கு உணர்வூட்டம் கொடுக்க வேண்டியவர்கள் 'நீங்கள் தாம்' என்பதை எவராலும் மறுக்கமுடியாது. மங்கலான ஒளியில் வாழ்ந்து பழக்கப்பட்டவர்களுக்கு உண்மையான ஒளி வெறும் மாயையாகவே தோன்றும். ஒளிமயமான சமூகமாற்றம், உங்கள் மனமாற்றத்தின் தோற்றமேயாகும். அதுவே, ஏற்றமிகு வாழ்வை அனைவர்க்கும் தோற்றுவிக்கும்.

**உறங்கியது போதும் விழித்தெழுங்கள்!**
**ஊனமுற்ற விலங்குகளை உடைத்தெறியுங்கள்!**

''பாதுகாவலன்'' 2-10-1987 அன்பு அண்ணா, வி. பி.

# மனிதத்துவம்

அன்பு இளம் உள்ளங்களுக்கு,

"மனிதர்கள் முழுமையாக மனிதர்களாக இல்லாதபோது அவர்கள் இறைவனுடைய மக்களாக இருக்கமுடியாது. மனிதாபிமானமற்ற சூழ்நிலைகளிற் புனிதம் வெளிப்பட முடியாது"

என்று கருத்துரைக்கிறார் கருதினல் எர்னெஸ்டோ டெனல். என்னை நானாக, அவனை அவனாக, அவளை அவளாக ஏற்றுக்கொள்ளத் தயங்குதல் தவறாகும். மனிதனின் நிகழ்கால இருப்புநிலையின் நிறைவுக்கு அடிப்படை அவன் இறைவனோடும் ஏனைய மனிதரோடும் ஏற்படுத்திக் கொள்ளும் உறவேயாகும். இறைவனைச் சந்திக்க மனிதன் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் மனிதனை மனிதனாக இனங்கண்டு, அவன் மனிதரோடு கொள்ளும் உறவின் நிறைவிலேயே தங்கியுள்ளது.

அவன் இறைவனைத் தேடி அலைகின்றான், இறைவனோடு பேச விரும்புகின்றான். ஆனால், அவன் மனிதரைக் கண்டு பயப்படுகின்றான், அவர்களிடமிருந்து தூர ஓடுகின்றான்.

அவர்களோடு சேர்ந்து வாழ விரும்புகின்றான். இல்லையெனில் அஃது ஒரு முரண்பாடேயாகும்.

எனவே, இளைஞர்களே ஒன்று சேருங்கள்.
இறை - மனித இணைப்பின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளுங்கள்.

மனிதன் இறைவனாக மாற முயலக்கூடாது—
அஃது இயலாமை.
மனிதன் மிருகமாக மாறக்கூடாது—
அஃது இகழ்வாற்றல்.
மனிதன் மனிதனாக வாழவேண்டும்—
அஃது இறவாமை.
புனிதத்துவத்தின் அடிப்படை மனிதத்துவம் ஆகும்.

"பாதுகாவலன்" 9-10-1987 அன்பு நெஞ்சன் வி.பி.



# தனித்துவம்

அன்பு இளம் உள்ளங்களுக்கு,

"பெற்றோருக்கும்பெரியோருக்கும் வால்பிடிக்காதீர்கள்" ...இதுதான் எனது கடிதத்தில் உங்களது மனதைத் தாக்கியுள்ள வசனம் "வால் பிடிக்காதீர்கள்" என்பதன் அர்த்தத்தைப் பிழையாக விளங்கிக் கொண்டுள்ளீர்கள்...... சாதாரணமாக "வால் பிடிக்காதீர்கள்" என்று கூறுவது, ஒருவன்

தன் சுய சிந்தனைக்கு இடம் கொடாது, மற்றவர்களிலே தன் வாழ்க்கையை ஒப்படைத்தல் என்ற பொருளைக் கொண்டிருக்கிறது. அதைத்தான் இங்கு கூற முயற்சித்துள்ளேன். அதாவது, தனது சுயசிந்தையின் மூலம் பெறப்பட்ட தீர்மானங்களைச் செயற்படுத்தாது உங்களுக்குப் பதிலாக மற்றவர்கள் (பெற்றோர்கள்) எடுக்கும் தீர்மானங்களைச் செயற்படுத்துகின்றீர்கள். இது நிச்சயமாக மனிதவளர்ச்சிக்கு ஒரு பெரிய முட்டுக்கட்டை.

நீங்கள் கூறியது போன்று பெற்றோர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள். வணக்கத்துக்குரியவர்கள்... அதே வேளை பெற்றோர்களின் ஆசீர்வாதத்துடன் கட்டப்பட்ட குடும்பங்கள் சீரழியவில்லையா?... எங்கும் நன்மையும், தீமையும் கலந்து தான் இருக்கின்றன. ஆகவே, எந்த ஒரு தீர்மானமும் ஒரு தனி மனிதனால் எடுக்கப்பட வேண்டும். தீர்மானம் எடுப்பதற்குப் பலர் உதவி செய்யலாம். அல்லது ஒருவன் தனது தீர்மானம் சரியா என்று அறிய உதவிகளைப் பெறலாம். ஆனால், நிச்சயமாக ஒருவன் தனது இறுதித் தீர்மானத்தைத் தானே எடுக்க வேண்டும். ஆகவே, உங்கள் சுய சிந்தனைக்கு இடம் கொடுங்கள்.

ஈற்றில், இன்னுமொரு பிரச்சினையைக் கிளப்பியுள்ளீர்கள். ''ஒவ்வொருவரும் தான் சொல்வதுதான் சரி, தான் செய்வதுதான் சரி என வாழத் தொடங்கினால் நாடு என்னையா ஆவது? அதற்குப் பின் குடும்பம் எதற்கையா?'' ஒவ்வொருவரும் சரியாகச் சிந்தித்து அச்சிந்தனையின்படி சரியாகச் சென்றால், சரியாகச் செய்தால் அது சரியே. ''நாங்கள் நினைத்தபடி எதுவும் செய்யலாம்'' என்று இளைஞர்கள் கூறினார்கள் என்கின்றீர்கள். அஃது ஏற்புடைய கூற்று அன்று. அஃது அவர்களது முதிர்ச்சியின்மையையே காட்டுகின்றது. நியாயமான முறையில் நினைத்த பின்னர் நிறைவேற்ற முயல்வதே முறையானது.

''பாதுகாவலன்'' 16-10-1987 அன்பு நெஞ்சன் வி. பி.



# தானம் நிதானம்

அன்பு இளம் உள்ளங்களுக்கு!

''சமுதாய விடுதலையையும், தனிமனித விடுதலையையும் ஒன்றிணைக்காததே கடந்த கால புரட்சிகளின் தோல்விக்குக் காரணமாகும். பேரின சமூக, சிற்றின சமூக சக்திகள் ஒன்றிணையும்போதே உள்ளகம், வெளியகம் இணைந்த நிலையிலேயே புது யுகம் புரட்சிப்பொருள் உளளதாயமையும்'' என்று டேவிற் கூப்பர் கூறுகிறார்.

ஒரு பிச்சைக்காரனுக்கு இருபத்தைந்து அல்லது ஐம்பது சத நாணயத்தைக் கொடுத்து நமது நாணயத்தைக் (சமுதாயப் பார்வையில் எமது நிலை) காப்பாற்றிவிடலாம் (எச்சரிக்கை ஐந்து அல்லது பத்து சத நாணயத்தைக் கொடுத்தால் அஃது எமது முகத்திலே திருப்பி எறியப்படலாம்) அல்லது புனித அந்தோனியார் பெயரால் பசியில்லாமல் இருப்போருக்கு பாண் வாங்கிக் கொடுக்கலாம் அல்லது உயிரோடு இருக்கும்போது முறையாக ஊண் கொடுக்காது துன்புறுத்தி, இறந்த பின்னர் 3 என்றும் 31 என்றும் ஊராருக்கு (சமூக அந்தஸ்தில் எமது நிலைப்பாட்டை உறுதிப்படுத்த) காய்ச்சிக் கொடுககலாம். இவற்றால் பெரிதாக நாம் எதையும் சாதித்துவிடவில்லை என்றே கூறவேண்டும். மாறாக, அடிமைத்துவம் என்ற சங்கிலியில் இன்னொரு வளையத்தைச் சேர்த்து விடுகிறோம்.

''பசியிருப்பவனுக்கு மீனைக் கொடுப்பதைவிட
மீனைப் பிடிக்கக் கற்றுக்கொடுப்பதே சிறந்தது''

என்று சீனப் பழமொழி கூறுகின்றது.

எனவே, இளைஞர்களே! புதுயுகம் படைக்கத் தூது செல்ல வாருங்கள். தனி மனிதனின் மாற்றமே தாயகத்தின் ஏற்றத்திற்கு வழிவகுக்கும். தனி மனித சக்திகளையும் சமூக சக்திகளையும் ஒன்றிணையச் செய்து, சத்தியத்தின் நிழலிலே நித்தியமும் வாழ முற்போக்குச் சமுதாயத்தைக் கட்டி எழுப்ப, உங்களது சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுங்கள்.

''பாதுகாவலன்'' 29-1-1988 அன்பு நெஞ்சன் வி. பி.

# வாழத்தான் வேண்டும்

அன்பு இளம் உள்ளங்களுக்கு!

உங்கள் மனம் இன்று படும் வேதனை எனக்கு நன்கு புரிகிறது. வாழப் பிறந்த நாம் எதையும் தாங்கும் இதயத்துடன் வாழ முயலத்தான் வேண்டும். இன்றைய நிலையில் எந்த வயதினரும் இளம் இதயங்களான உங்கள் சோர்வைத் தாங்கமாட்டார்கள். இன்றைய உலகம் உங்கள் கரங்களில் தான். இரவும் பகலும் அவர்கள் வாழ்க்கை உங்கள் பாதுகாப்பிலதான். அதனால்தான் சொல்கிறேன்.



நீங்கள் முக்கியமானவர்கள்; உங்கள் சிந்தனை செயல்கள் நல்லவையாக அமைய வேண்டும். வீண் திண்ணைப்பேச்சு பேசிக் காலத்தைக் கழிப்பவர்களுக்கும், நீங்கள் தான் முன் மாதிரிகையானவர்களாய் வாழ்ந்து காட்ட வேண்டும்.

இளமை என்றும் நிரந்தரம் அல்ல. அந்தப் பருவத்தை நல்ல பயன் உள்ள முறையில் வழிப்படுத்தாது பின்னர் கவலை கொண்டோர் பலர். அதில் நீங்களும் சேர்ந்து விடாதீர்கள். ஒரு மனிதன் எத்தனை காலம் வாழ்ந்தான் என்பது முக்கியமல்ல; எப்படி வாழ்ந்தான் என்பது தான் முக்கியம். வந்து பிறந்து விட்டோம் வாழத் தெரியவில்லை என்று ஏங்கும் இதயங்களுக்கும் நீங்கள் வழிகாட்டியாய் வாழ, நீங்கள் வாழத்தான் வேண்டும்.

இன்றைய உலகில் பெரியவர்கள் என தம்மைத்தாமே கூறிக்கொள்பவர்களின் சட்ட திட்டங்கள் எல்லாம் வெறும் புத்தக பூச்சிகளாக பல பெட்டகங்களில் அடைக்கப்பட்டுள்ளது. நடைமுறை மாற்றங்களும் எதிர்பாராத திருப்பங்களும் துடிப்புமிகு இளைஞர்களின் செயல்களாகவே காண்கிறோம்.

அழுகுரலும் மரண ஓலங்களும், அகதி முகாங்களும் பெருகின்றதே தவிர சமாதானம் என்பது வீண் பிதற்றல் பேச்சாய்தான் இருக்கின்றது. சமாதானத்தை சாக்கடையாக்கி இரத்த ஆற்றில் குளித்து மகிழும்அரசியல் சூதாட்ட உலகில் மனித விடுதலை காண, மன உறுதியுடன் வாழ, வாழத்தான் வேண்டும்; நீங்கள்வாழத்தான் வேண்டும்.

சோதனையிலும் சாதனை புரிந்து
வேதனையிலும் நிதனை வென்று
நாதனை வேண்டி நல்வினை செய்வோம்.

''பாதுகாவலன்'' *11-3-1988* அன்பு நெஞ்சன் வி. பி.

# அழியாத கோலங்கள்

அன்பு இளம் உள்ளங்களுக்கு!

பிறந்தவர் இறப்பது இயற்கையின் நியதி.
இறந்தோரை நினைப்பது மனித நிகழ்வு.

இதனைச் சமயச் சடங்குகள், சமுதாய சம்பிரதாயங்கள் வெளிக்காட்டுகின்றன, ஆனால் இவை இறந்தும் உயிர் வாழும் இறைவா நெஞ்சங்களுக்குச் சான்று பகர்கின்றனவா என்பது கேள்விக்குறியே.



உண்மையில் அவர்கள் வார்த்தைகளும் வாழ்க்கையும் இணைந்த நிலையில், போதனையும் சாதனையும் ஒருமித்து நிற்கத் தனக்காக வாழாது, பிறருக்காக வாழ்ந்ததால்தான் இன்றும் அழியாத கோலங்களாக அழகாகக் காட்சியளிக்கின்றனர்கள். பிறருக்குப் பசளையாகிவிட்ட அவர்களது வாழ்க்கை இன்று புதிய ஒரு தாரகையாய் பிரகாசிக்கின்றது.

அதேவேளை, இன்று எத்தனைபேர் வாழ்வில் பிடிப்பின்றி நடைப்பிணமாக ஜனத்தொகைக் கணிப்பீட்டிற்கு மட்டும் பங்களிப்புச் செய்து உயிர் பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் வாழ்ந்தும் இறந்தவர்களே. இறந்தவர்களை நினைவு கூரும்வேளை இறந்தவர்களாய்த் தோற்றம் தரும் இவர்களுக்காகவும் இறைவனை வேண்டுவோம். இவர்களுக்காக வேண்டும் போது எமது வாழ்க்கையைப்பற்றியும் சற்று சிந்திப்போம்.

எந்த வகையில் எமது வாழ்க்கையை அமைத்துக்கொண்டோம்? இந்த வாழ்க்கை வீட்டிற்கு, நாட்டிற்குச் சமூகத்திற்கு எப்படி உதவுகின்றது? எமது வாழ்க்கையின் வளர்ச்சிப் படி நிலைகளை வயதாற் கணிப்பிடாமல் தினம் நாம் செய்யும் நற்செயல்களால் மதிப்பிடுவோம். அப்பொழுதுதான் நாம் அர்த்தமுடைய வாழ்க்கையை வாழ்ந்து காட்ட முடியும்.

மனச்சாந்தியுடனான செயற்பாடே மனிதனைப் புனிதனாக்குகின்றது. இறவா வரம் பெற்ற ஜீவன்களின் வாழ்க்கைத் தத்துவங்கள் இதனையே தெளிவுபடுத்துகின்றன.

உன் வழிகாட்டி மனச்சாட்சி
உன் செயற்பாடுதான் உன் நண்பன்.

''பாதுகாவலன்'' 25-3-1988 அன்பு நெஞ்சன் வி. ஜி.

# நல்ல நண்பன் யார்?

அன்பு இளம் உள்ளங்களுக்கு!

"மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பார்கள் சிலர். பார்வைக்கு எல்லோரும் மனிதர்கள்தான் ஆனால் செயல்தான் நல்லவன், கெட்டவன் என மாற்றுகிறது. சிலர் தோற்றத்தால் பெரிய மனிதர்களாக சமூகத்தில் வாழ்ந் தாலும் அவர்கள் செயல்கள் மட்டும் சின்னத்தனமானதே.

இதை இன்றைய சமூகம் இனங்காண்பதில்லை. அதனுற் தான் சொல்கிறேன். இளைஞர்களே! விழிப்பாயிருங்கள், போலிகள் இன்று வேலியாய் இருக்க முயல்கின்றன, சில மனிதரிடம் உள்ள நல்ல குணங்கள், தம்மைப் பெரிய மனிதர்கள் எனக் கூறிக்கொள்பவர்களிடம் காண்பது அரிதே. ஒருவரது தோற்றத்தைக் கொண்டு எடை போட்டு விடா தீர்கள். முரட்டுத்தனமான தோற்றம் உடையவர் இடத்தே நல்ல பண்பான பாச உணர்வுகளைப் பேசிப்பார்த்த பின்பே புரிந்து கொள்கின்றோம். ஆதரலாற் சந்தித்துப் பேசிப் பழகு முன்பே ஒருவரை எடைபோட்டு விடாதீர். அன்பாக அணை க்க வந்து அடுத்துக் கெடுப்பவரை விட ஓர் எதிரி எனத் தெரிந்து அவருடன் நட்பு வைத்துக் கொள்வது மேல் என ஓர் அறிஞர் கூறுகிறார். இப்படி

"வழு வழுத்த உறவை விட
வைரமான பகையே மேல்."

ஆதலால் எவரையும் தோற்றத்தையும், பணப்பலத்தை யும் வார்த்தைகளையும் கொண்டு எடைபோடாது, சொல் லும் செயலும் ஒன்ருய் இருக்கும் நற்சேவையாளனை நண் பனுக நல்லவனுகத், தேர்ந்தெடுப்பதிலேதான் நீயும் உன்னுல் நாடும் சமூகமும் உயர்வடையும்.

வார்த்தை + வாழ்க்கை = மனிதன்

'பாதுகாவலன்" 8-4-1988 அன்பு நெஞ்சன் வி. பி



# வழிகாட்ட வாருங்கள்

அன்பு இளம் உள்ளங்களுக்கு!

எல்லோரும் தேடுவதைப்போற்தான் நானும் உங்களை தேடுகிறேன். எங்கே வாழ்கிறீர்கள். மற்றவர்கள் தேடுவது போல், உங்களைக் காட்டிக் கொடுக்கவோ, தண்டனை தரவோ, தலையாட்டிவிடவோ அல்ல, மாருக மனம்திறந்து பேச உங்கள் திறமைக்கு களம் அமைக்க, அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளத்தான் அழைக்கின்றேன். வாருங்கள் இளைஞர் உலகிற்கு.

கல்லூரிப் படிப்புடன் கடமை முடிந்தது என சிலர் தூங்குகின்ருர்கள். பரீட்சைக்கு மட்டும்தான் படிப்பு, வாழ்க் கைக்கு அல்ல எனச் சிலர் தூங்குகிருர்கள். வாலிப வயதை வயோதிப நிலையாய் மாற்றி வீட்டிலிருந்து வீண் வம்பு பேசு கிருர்கள். அவர்களுடன் நீங்களும் இணைந்து விடாது முயற் சியே முன்னேற்றத்தின் வழி என உணர்ந்து செயற்பட வாருங் கள். வீட்டில் வாழும் மிருகங்கள் போல் உணவுக்காக மட் டும் உயிர் வாழாது உங்கள் திறமைக்கு சான்று பகர நேரத் தைப் பொன்னுக்கித், திறமைக்குச் சர்ந்தப்பம் அளித்து முயற்சித்தால் முன்னேற்றம் உண்டு அல்லவா? எதற்கும் நொண்டிச் சாட்டில் நொந்து வாழாது உள்ளத்தைத் திட மாக்கி இளைஞர் உலகிற்கு வழிகாட்ட வாருங்கள்.

பாதுகாவலன் 15 – 4 – 1988 அன்பு நெஞ்சன் வி. பி.

# எதிர் நீச்சல்

அன்பு இளம் உள்ளங்களுக்கு!

"விதம் விதமாய் துணிகள் இருக்கு
விலையைக் கேட்டா நடுக்கம் வருது
வகை வகையா நகைகள் இருக்கு
மடியைப் பார்த்தா மயக்கம் வருது
எதை எதையோ வாங்கணு மின்னு
எண்ணமிருக்கு வழியில்லேஇதை
எண்ணுமலிருக்கவும் முடியல்லே"

என்கின்ருர் கவிஞர் பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம்.

எண்ணில்லாத் தேவைகள் மனித வாழ்க்கையில் எழுவது இயல்பே. இது தொடர்பாக எழும் ஏக்கங்கள், தேவைகள் நிறைவு செய்யப்படாததால் ஏற்படும் தாக்கங்கள் எளிதானவை அல்ல. எனினும், அன்பு நெஞ்சங்களே, அவசரப் பட்டு தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டு விடாதீர்கள். பிரச்சனைகளை நேருக்கு நேர் எதிர்கொள்ளத் தயங்காதீர்கள். ஏக்கங்களாலும், தாக்கங்களாலும் அல்லல்பட்டாலும் அவற்றிலிருந்து விடுதலை பெறும்வழி தப்பி ஓடுவதில் அல்ல; மாருக அவற்றை எதிர்கொண்டு எதிர்நீச்சல் போடுவதிலேயே தங்கியுள்ளது. அவற்றை முறியடிக்கும் திறன் உங்களிடம் நிச்சயமாக உள்ளது. எனவே,

துயரினை மறக்கத் துணிந்து நில்லுங்கள்;
இடரினை வெல்ல எழுந்து செல்லுங்கள்.

நல்வாழ்த்துக்களுடன்,

பாதுகாவலன் 3-6-1988 அன்பு நெஞ்சன் வி. பி.



# விழித்தெழுங்கள்

அன்பு இளம் நெஞ்சங்களுக்கு!

"கண்ணுக்கு அழகாப் பெண்ணைப் படைச்சான்
பொண்ணுக்குத் துணையா ஆணைப் படைச்சான்.
ஒண்ணுக்குப் பத்தாய் செல்வத்தைப் படைச்சான்
உலகம் நிறைய இன்பத்தைப் படைச்சான்
என்னைப்போலே பல்ரையும் படைச்சு — அண்ணே
என்னைப்போலே பலரையும் படைச்சு
இதுக்கும் அதுக்கும் எங்க வைச்சான்
ஏழையைக் கடவுள் ஏன் படைச்சான்?"

என்ருர் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.

இன்று எத்தனையோ ஏழைகள் ஓலைக்குடிசைகளிலிருந்து எழுப்பும் அழுகுரல்கள் இன்னும் உங்களுக்குக் கேட்கவில்லையா? அல்லது கண்கள் இருந்தும் காணுதவர்கள் போல, காதுகள் இருந்தும் கேளாதவர்கள்போல, உள்ளம் இருந்தும் உணராதவர்கள் போல உணர்ச்சி மரத்துப்போன மரக்கட்டைகளா நீங்கள்? இல்லவே இல்லை இளைஞர்களே, நீங்கள் இதற்கு முற்றிலும் முரணுனவர்கள். ஏழைகளின் கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்ற உணர்ச்சிவேகம் உங்களிடம் இருக்கின்றது. எல்லோரையும் நல்லவராக, வாழ்வில் வல்லவராக வாழ வைக்கவேண்டும் என்ற ஆர்வம் உங்களிடம் இருக்கின்றது. 'எளியோரைத் தாழ்த்தி வலியோரை வாழ்த்தும்' உலகை மாற்றும் ஆற்றல் உங்களிடம் இருக்கின்றது.

பதுங்கி இருந்தது போதும் — பாய்ந்து வாருங்கள்.
பசிக்கக் கிடந்தது போதும் — புசிக்கச் செய்யுங்கள்.

ஏழைகளின் கண்ணீரை
நீங்கள்தான் துடைக்கவேண்டும்
எளியோர்க்கு நல்வாழ்வினை
நீங்கள்தான் கொடுக்க வேண்டும்.

பாதுகாவலன் 10-6-1988 அன்பு நெஞ்சன் வி. பி.

# அவசியம்தானா?

அன்பு இளம் நெஞ்சங்களுக்கு;

சென்ற ஆண்டு ஆனிமாதத்தில் இது நிகழ்ந்தது. நாட்டு நிலைமை காரணமாக, பாரம்பரியமாக இடம் பெற்றுவரும் சுற்றுப்பிரகாரம் தடைப்பட்டது. ஒரு சிலர் எப்படியாவது வழமைபோல் சுற்றுப்பிரகாரம் நடைபெறவேண்டும் என ஆர்ப்பாட்டம் செய்தார்கள். எனினும், பங்குத்தந்தையார் "ஆண்டவர் போன வழியால் அந்தோனியார் போவார்" என்று நிதானமாகக் கூறி, ஆடம்பரமான சுற்றுப் பிரகாரத்தை மிக எளிமையான முறையில் முடித்து வைத்தார். உண்மையான பக்தியுள்ளவர்கள். ஆழமான விசுவாசமுள்ளவர்கள் இதனை வரவேற்கிறார்கள். ஆனால் ஆண்டுக்கு ஒரு முறை ஆலயத்தைத் தரிசிக்கும் சில ஆடம்பர விரும்பிகளுக்குபெரும் ஏமாற்றமாகவே இருந்தது. (எவரையும் குறிப்பாகத் தாக்குவது எனது நோக்கம் அல்ல.)

ஆனால் நாட்டு நிலைமை ஓரளவிற்கு சாதகமான நிலைக்குத் திரும்பிவரும வேளையில் எமக்கு ஏக்கமும் ஏமாற்றமும் கூடிச்செல்வது கவலைக்குரியதே. அநாவசியக் கொண்டாட்டங்கள், ஆடம்பரச் செலவீனங்கள் அதிகரித்து வருகின்றன. அற்ஹோம் அழைப்பிதழ்களும் ஒலிபெருக்கிச் சத்தங்களும் கூடுகின்றன. கோவிற் திருவிழாக்கள் வெறும் களியாட்டங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. அமைதி, அருள், பக்தி நிறைந்த புனித சூழல் பாதிப்படைந்து வருகின்றது. வீதிக்கு வீதி ஒலிபெருக்கிகளைப் பொருத்திவிட்டு வேடிக்கை பார்ப்பது, மாணவர்களைப் படிக்கவிடாது தொந்தரவு செய்வது எந்த வகையில்நியாயமாகும்? இதுதான் பொதுநல சேவையின் பிரதிபலிப்பா? ஆன்மீக நடத்துனர்களின் அசட்டைத்தனமா? திருநாள் களியாட்டங்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் இன்னும் தொடர்ந்து வருவது அவசியம்தானா?

**இளைஞர்களே, ஏன் இன்னும் மாறாதிருக்கிறீர்கள்?**
**இதற்கு நீங்களும் உடந்தைதானா?**

**பாதுகாவலன் 17-6-9 1988 அன்பு நெஞ்சன் வி. பி.**



# மகிழ்வின் மலர்வு

அன்பு இளம் நெஞ்சங்களுக்கு;

இங்கிரிட் பொக்மேன் என்பவர் சுவீடன் நாட்டு நடிகையாவார். நாற்பதாண்டுக்கு மேலாக அனைத்துலக நட்சத்திரமாகத் திகழ்ந்த இவர், வாங்காத பரிசுகள் இல்லை. குவிக்காத செல்வமோ, செல்வாக்கோ இல்லை. ஆஸ்கார் பரிசுமட்டும் மூன்று முறை வாங்கியிருக்கிறார்.

பெண்மையின் கண்ணியத்துடனும், அதேவேளை சுயமரியாதை ஆவேசத்துடனும் நடந்துகொண்டார் இங்கிரிட்; எதற்காகவும், யாருக்காகவும் எதையும் விட்டுக்கொடுக்கவில்லை.

அவாது 50 வது வயதில் புற்றுநோய் அவரைப் பற்றியது. பெண்களுக்குப் பொதுவாக வரும் மார்புப் புற்றுநோய் அவருக்கு வந்தது. 1974 இல் ஒரு மார்பகம் அறுவை செய்து எடுக்கப்பட்டது.

இனி 'கான்சர்' பயமில்லை என்று டாக்டர்கள் சொன்னார்கள். ஆனால் ஐந்தாண்டுக்குள் அடுத்த மார்புக்கும் பரவியது 'கான்சர்'. 1979 இல் இரண்டாவது மார்பும் 'ஆப்பிரேஷன்' செய்து அகற்றப்பட்டது.

'கான்சர்' என்றதும் நடுங்கி, உயிர் குன்றிப்போகும் மக்கள் நிறைந்த உலகில் இங்கிரிட் மனம் தளரவில்லை.

1985 இல் டெலிவிஷன் காட்சியில், காலஞ்சென்ற இஸ்ரேலியப் பெண்பிரதமர் கோல்டா மேயராக நடிக்க வேண்டும் என்று கூப்பிட்டார்கள். "மற்றவர்களுக்கு மகிழ்ச்சி என்றால் அது எனக்கும் மகிழ்ச்சியே" என்று ஒத்துக் கொண்டார் இஙகிரிட்.

மற்றவர்களுக்கு மகிழ்ச்சியளிப்பதற்காக இங்கிரிட் வாழ்ந்திருக்க விரும்பினாரே தவிர, மற்றவர் சேவையைப் பெற்று மகிழ்ந்திருக்கத் துடிக்கவில்லை.

எமது சொந்த நலனுக்காக, அல்லது எமது குடும்பத்தில் அல்லது எமது உறவினரின் நலனுக்காக மட்டும் வாழ்வது வெறும் சுயநலமே, 'நான்' என்ற அகங்காரத்தை வளர விடுவோமாகில் நாம் இன்னும் நல்ல கிறிஸ்தவர்களாக மாறவில்லை என்றே கூறவேண்டும்.

தமக்காக மட்டும் வாழும் தனிமரங்கள்
தரணியில் என்றுமே கனிதரமாட்டா,
நமக்காக மட்டும் வாழ்ந்தது போதும்
நன்மை செய்வதே நமது பணியாகட்டும்.

பாதுகாவலன் 24-6-1988 அன்பு நெஞ்சன் வி. பி.

நான் எழுதியது கடிதம் அல்ல;
என் எண்ணம்.
எண்ணம் எல்லாம் வெறும் எழுத்தும் அல்ல;
உண்மை.
அந்த உண்மைகளை உணரவைக்க
இந்த 80 ல் இருந்து 88 வரை
இதற்குத் தூண்டுகோலாயிருந்து
ஆசியுரை அளித்த முதல்வர் அதிவண.
லூயி பொன்னையா அ. ம. தி. அவர்களுக்கும்
'பாதுகாவலன்' பத்திரிகை ஆசிரியர்
வண. அருமைநாயகம் அவர்களுக்கும்,
மணியோசை யோசப் பாலா அவர்களுக்கும்
என் இதய நன்றிகள்.
அனைத்து வாசக நேயர்களுக்கும்
எனது அன்பு வாழ்த்துக்கள்.

— வி. பி